www.padippakam.com

136

Raya

# ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!







## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்

'தொழிலாளர் பாதை' வெளியீடு

RAYA
FRANCE

www.padippakam.com

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR - SEINE ; FRANCE

# ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்

'தொழிலாளர் பாதை' வெளியீடு

www.padippakam.com

முதலாம் பதிப்பு - 1991

Veröffentlicht im September 1991
© Arbeiterpresse Verlag, Postfach 100 105, W-4300 Essen 1
ISBN 3 - 88634 - 503 - 3
Printed in Germany 1991
Preis: DM 2,-

பதிப்பாளர்: புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு-10

அச்சகம்: பியதாச அச்சகம்
51, நாகஹவத்த வீதி,
மஹரகம.

படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்

1. 1991 மே தினத்தில், லியொன் ட்ரொட்ஸ்கியால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக ஒரு உலக தொழிலாளர் மகாநாட்டைக் கூட்ட அழைப்பு விடுக்கின்றது. இம் மகாநாடு அனைத்துலகக் குழுவின் ஆதரவுடன் பேர்ளினில் – 75 ஆண்டுகளின் முன்னர் கார்ல் லீப்நெக்ட் முதலாம் உலக யுத்தத்தினைக் கண்டித்தும் தமது அழியாப் புகழ் பெற்ற அறிக்கையை வெளியிட்ட நகரில்–நவம்பர் 16ம் 17ம் திகதிகளில் நடைபெறும். இம்மகாநாடு, வார்த்தை ஜாலங்களுக்கும் வெற்றுச் சுலோகங்களுக்கும் ஒரு காட்சியறையாகாது. அத்தகைய அரசியல் நடிப்புக்களால் தொழிலாள வர்க்கத்துக்குப் பயன் இல்லை. அதற்குப் பதிலாக அனைத்துலகக் குழு புரிந்து கொண்டுள்ள முறையில் இம்மகாநாடு, ஏகாதிபத்திய முதலாளித்துவத் தலைவர்களின் உத்தேச யுத்தத்தினையும் காலனித்துவ அடிமைத்தளையையும் பரந்த வறுமையையும் கொண்ட 'புதிய உலக அமைப்புக்கு' எதிராக தொழிலாள வர்க்கத்தினை புரட்சிகரமாக அணிதிரட்டும் பொருட்டு சோசலிச வேலைத்திட்டத்தினைக் கலந்துரையாடி, நிறைவேற்றும். இம்மகாநாட்டின் மைய இலக்கு, சமூக ஜனநாயகவாதிகள், ஸ்டாலினிஸ்டுகள், மற்றும் சந்தர்ப்பவாதப் பிரதிநிதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட சோசலிச

படிப்பகம்

www.padippakam.com



அனைத்துலகவாதத்தின் மாபெரும் பாரம்பரியங்களை உலகத் தொழிலாளர் அணியினுள் புதுப்பிப்பதே.

2. பாரசீக வளைகுடா யுத்தம் தொழிலாள வர்க்கத்தின் பாரம்பரிய லேபர் கட்சிகளதும் தொழிற்சங்க அமைப்புக்களதும் அடியோடு உதவாக்கரையான தன்மையை அம்பலமாக்கியுள்ளது. ஈராக்குக்கு எதிரான யுத்தத்திற்கு உலகின் எந்தவொரு பாகத்திலும் அணிதிரண்ட தொழிலாள வர்க்கத்தின் கணிசமான எதிர்ப்புக் கிடைக்கவில்லை. இலட்சோப லட்சம் தொழிலாளர்களின் நேர்மையான ஆத்திரமும் வெறுப்பும் நிலவிய போதிலும் ஏகாதிபத்தியத் தாக்குதலின் பேரிலான அவர்களின் இயற்கையான வர்க்க எதிர்ப்பு, எந்தவிதமான அணிதிரண்ட; சுயாதீன அரசியல் உருவம் எடுக்க அனுமதிக்கப்படவில்லை, எங்கு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் எதிர்ப்புக்களையும் முற்றாகத் தடுத்துவிடமுடியவில்லையோ அங்கெல்லாம் லேபர் அதிகாரத்துவங்களும், சமூக ஜனநாயகவாதிகளும் அத்தோடு ஸ்டாலினிஸ்டுகளும் அவை தமது அரசாங்கங்களின் யுத்தக் கொள்கைகளுக்கு அச்சுறுத்தல் உருவம் எடுத்துவிடா வண்ணம் பார்த்துக் கொண்டனர், ஆயிரக்கணக்கான சோம்பேறிக் குட்டி முதலாளித்துவ அலுவலர்களைக் கொண்ட உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் இயக்கங்களின் சகல பழைய அமைப்புக்களும் முழுமனே முதலாளித்துவ அரசின் இணைப்புக்களாக மாற்றப்பட்டன. அவர்களின் நடைமுறை மட்டுமன்றி, அவர்களின் உத்தியோகபூர்வமான வேலைத்திட்டத்தினைப் பொறுத்தமட்டிலும் ஸ்டாலினிஸ்டுகள் சமூக ஜனநாயகவாதிகளுக்கும் உத்தியோகபூர்வமான முதலாளித்துவக் கட்சிகளுக்கும் இடையேயான அரசியல் வேறுபாடு அடியோடு மங்கிப் போய்விட்டது. பிரான்சிஸ் மிட்ரண்டின் சோசலிஸ்ட் அரசாங்கம் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைப் பாரிசில் தடை செய்ததோடு ஈராக் பெண்களையும் குழந்தைகளையும் குண்டு வீசிக் கொல்ல விமானங்களை அனுப்பியது, பிரித்தானியாவில் சமூக ஜனநாயகவாதிகள் ஆட்சியில் இல்லாமல் போனமை, அவர்களை இதைச் செய்யவிடாது தடுத்து விட்டது என்பதே உண்மை. எனினும் தொழிற் கட்சித் தலைவரான கினொக், யூனியன் ஜக் கொடிக்கு 'சல்யூட்' அடிக்கக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தியதோடு, டோரி பிரதமரின் காலடியில் தவழ்ந்தார். ஜேர்மன் சமூக ஜனநாயகவாதிகள் ஈராக்குக்கு எதிரான யுத்தத்தினை அங்கீகரிப்பதில் சீ. டி. யூ. வுடன் இணைந்ததோடு, யுத்தத்துக்கு எதிராக தொழிலாளர், இளைஞர்களிடையே வளர்ச்சி கண்ட எதிர்ப்பினைச் சிரச்சேதம் செய்வதில் தமது சக்திக்குட்பட்ட சகலதையும் செய்தனர். ஸ்டாலினிஸ்டுகளைப் பொறுத்தமட்டில் இந்த யுத்தம், சோவியத்

படிப்பகம்

www.padippakam.com



அதிகாரத்துவம் உலக அரசியலில் ஏதோ ஒரு வகையான ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தி என நிலவிவந்த பழைய கட்டுக்கதையின் மிச்சசொச்சங்களையும் இறுதியாக உடைத்து எறிந்துள்ளது. சோவியத் ருஷ்யாவினுள் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யும் கொர்பச்சேவின் அப்பட்டமான முயற்சிகள், ஈராக்குக்கு எதிரான யுத்தத்தினை கிரேம்ளின் அங்கீகரித்ததில் அதன் கொலைகார அனைத்துலக வெளிப்பாட்டினைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியவாதிகளின் பின்னால் தொழிலாளர் அதிகாரத்துவங்களின் இந்த அவமானமான அணிதிரள்வானது ஒவ்வொரு வர்க்க நனவுள்ள தொழிலாளிக்கும் ஓர் எச்சரிக்கையாகும்: ஏகாதிபத்திய இராணுவ வாதத்துக்கு எதிரான போராட்டத்தினை முன்னெடுக்கும் புதிய புரட்சிகரத் தலைமையைக் கட்டி எழுப்புவதில் இனியும் காலங்கடத்த முடியாது.

3. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழிலாள வர்க்கத்தையும், ஒடுக்கப்படும் மக்களையும் எதிர்கொண்ட சகல மாபெரும் வரலாற்று, அரசியல் பணிகளும் இன்று உறுதியான முறையில் எழுப்பப்பட்டுள்ளன. ஈராக் காட்டுமிராண்டித்தனமான முறையில் குண்டு வீச்சுக்குள்ளானமையும், அதன் கைத்தொழில் அடிக்கட்டுமானம் அடியோடு நாசமாக்கப்பட்டமையும் ஒரு புதிய ஏகாதிபத்திய காட்டுமிராண்டிச் சகாப்தத்தின் தொடக்கத்தைக் குறிக்கின்றது. முதலாளித்துவம், இலட்சோப இலட்சம் மக்களை அடிமைகளாக்காமலும் — அழித்தொழிக்காமலும் உயிர் வாழ முடியாது. இந்நூற்றாண்டில் இரு தடவைகள் – 1914லும் 1939லும் – ஏகாதிபத்தியம் மனித இனத்தை உலக யுத்தங்களுள் மூழ்கடித்தது. அது பல கோடி மனித உயிர்களைப் பலிகொண்டது. பாரசீக வளைகுடா யுத்தம் – அதில் இறந்தோரின் எண்ணிக்கை இன்னமும் கணக்கிடப்படாவிடினும் – இன்னமும் பிரமாண்டமான உலகப் பேரழிவுக்கான தயாரிப்புக்கள் இடம் பெற்று வருகின்றன என்பதற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இது கிட்டத்தட்ட ஒரு பெரும் நாடகாசிரியர், மனித இனத்தினை தனது பார்வையாளர்களாகக் கொண்டு 20பதாம் நூற்றாண்டின் அரையிறுதிக்கால இரத்தம் தோய்ந்த சம்பவங்களை மீண்டும் மேடையேற்ற முடிவு செய்ததைப் போன்றது.

4. ஆகஸ்ட் 1990ல் இருந்து இவை எல்லாம் இடம்பெற்றதன் பின்னரும் பாரசீக வளைகுடா யுத்தம் ஒரு வெறும் தனிமைப்பட்ட நிகழ்வு எனவும், அது எந்தவொரு பரந்த ஏகாதிபத்திய நலன்களுடனும் தொடர்புபட்டது அல்ல எனவும், ஈராக் குவைத்தினை இணைத்துக் கொண்டதால் மட்டுமே அது தூண்டிவிடப் பட்டது எனவும் குணப்படுத்த முடியாத அப்பாவிகள் மட்டுமே இனியும் நம்ப முடியும். எண்ணெய்

www.padippakam.com



வளம் கொண்ட வளைகுடா அரசுகளை அமெரிக்காவின் பாதுகாப்பு வலயங்களாக மாற்றியதைத் தொடர்ந்து, யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய வல்லரசுகளின் இராணுவத்தினால் ஈராக்கின் வட பகுதி கைப்பற்றப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் ஈராக் பாகப்பிரிவினையானது ஏகாதிபத்திய வாதிகளின் புதிய உலகப் பிரிவினையின் ஆரம்பத்தினைச் சைகை காட்டி நிற்கின்றது. நேற்றைய காலனிகள் மீண்டும் அடிமைப்படுத்தப்படவுள்ளன. ஏகாதிபத்தியத்தின் சந்தர்ப்பவாதிகளாலும் வக்கீல்களாலும் கடந்த காலத்துக்குரியது எனக் கூறிக்கொள்ளப்பட்ட கைப்பற்றல்களும், இணைப்புக்களும் திரும்பவும் இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5. ஈராக்கினை அழிக்கவும், கொள்ளையடிக்கவும் அவர்கள் கொண்டிருந்த உறுதி காரணமாக ஏகாதிபத்தியவாதிகள் ஒரு விநோதமான ஐக்கிய நோக்கினை வெளிக்காட்டினர். ஏகாதிபத்திய ஒழுக்கக் கேட்டின் விளைநிலமான ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடர்கள் ஒரு இராணுவ விலைமாதர் மடமளவுக்கு இறங்கியது. 'செயலில் இறங்கும் முன்னர்' முதலாளித்துவ இராஜதந்திரிகள் பாதுகாப்புச் சபையின் கதவுக்கு வெளியே வரிசையில் நின்றனர். ஈராக்குக்கு எதிரான தாக்குதலுக்கு அமெரிக்கா விடுத்த அழைப்புக்கு பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, யப்பான் மட்டுமன்றி பலம் குன்றிய ஏகாதிபத்தியச் சக்திகளான அவுஸ்திரேலியா, கனடா, இத்தாலி, ஸ்பெயின், நெதர்லாந்து, பெல்ஜியம், டென்மார்க், சுவிட்ஸலாந்து முதலியனவும் சம்மதித்தன. 'டைனமைட்'டைக் கண்டுபிடித்தவரின் ஞாபகார்த்தமாக வருடாந்தம் ஒரு புகழ்பெற்ற சமாதான பரிசை வழங்கி வரும் நோர்வே கூட இந்த ஈராக் எதிர்ப்புப் போருக்கு ஒரு பங்களிப்புச் செய்தது. இந்தக் கூட்டில் பரந்தளவிலான பங்களிப்பு, ஈராக்குக்கு எதிரான யுத்தம், சகல ஏகாதிபத்தியச் சக்திகளும் காலனித்துவக் கொள்கையை புதுப்பிப்பதை சட்டரீதியாக்கும் என்ற மறைமுகப் புரிந்துணர்வின் அடிப்படையிலேயே ஏற்பட்டது. அமெரிக்கா தலைமையிலான இந்த யுத்தத்துக்கு ஆதரவளிப்பதை ஏனைய ஏகாதிபத்திய அரசுகள் ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா முதலான இடங்களில் தமது எதிர்கால யுத்தங்களுக்கு அமெரிக்காவின் பூரண ஆதரவை அல்லது அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு முற்கொடுப்பனவாகக் கருதிக் கொண்டன. செவிலிக்கு அருகே மோரொன் விமானத் தளத்தில் அமெரிக்காவுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம், ஸ்பெயின் அரசாங்கம் மகராப்பில் தனது சொந்தத் திட்டங்களுக்கு 'பெரும் வல்லரசுகளின்' ஆதரவினை வெற்றி கொள்ள முயன்றது. அமெரிக்காவுக்கு ஆதரவளிப்பதற்குக் கைமாறாக டச்சு அரசாங்கம், அதனது முன்னாள் காலனியான சூரிநாமில் தனது வெளிநாட்டுக்

www.padippakam.com



கொள்கைகளை மீண்டும் ஸ்தாபிதம் செய்வதற்கு ஆதரவு பெற்றது. புஷ்சும் பேக்கரும் தமது கூட்டினைக் கூட்டிய போது இத்தகைய எத்தனை கைமாறுகள் இடம் பெற்றனவோ என ஒருவர் கற்பனை செய்யலாம். ஆனால் கள்வர்களிடையே நட்புறவு கிடையாது. காலனித்துவத்தின் புனர்வாழ்வு நீண்டதும், பாரதூரமானதுமான எதிர்விளைவுகளைக் கொண்டது. 1914ம் 1939ம் ஆண்டுகளுக்கு முன்னர் போன்று சிறியதும், பாதுகாப்பற்றதுமான நாடுகளைக் கொள்ளையடிப்பதும் அடிமைப்படுத்துவதும் ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு இடையேயான தகராறுகளையும் போராட்டங்களையும் உக்கிரமாக்குவதுடன் பிரிக்க முடியாவண்ணம் இணைந்துள்ளது.

6. 1945ல் இருந்து உலக முதலாளித்துவத்தின் உருவத்திலும், அடிப்படையிலும் ஏற்பட்ட பல மாற்றங்களுக்கு இடையேயும் முதலாம், இரண்டாம் உலக யுத்தங்களுக்கு இட்டுச் சென்ற சந்தைகள், மூலப்பொருள் வளங்கள், 'மலிவு உழைப்பு'க்கான வாய்ப்புக்கள் மீதான் அதே மோதுதல்கள் மூன்றாம் உலக யுத்தத்துக்கு இடைவிடாது இட்டுச் செல்கின்றது. 20ம் நூற்றாண்டில் விஞ்ஞானம் பிரமாண்டமான 'அதிசயங்களை' ஈட்டியுள்ளது. உலகின் இயக்கத்தினை ஆளும் விதிகளினைப் பற்றிய மனிதனின் விளக்கத்தினை மாற்றியுள்ளது. இது நடைமுறையான அண்டவெளி ஆய்வுகளை ஆரம்பித்து வைத்துள்ளது. இது மனித உயிரின் விந்து அடிப்படையை முன்னொரு போதும் இல்லாத விதத்தில் நுணுக்கமாக வரைந்து காட்டியுள்ளது. இவற்றின் மூலம் உயிரியல் ரீதியிலாவது மனித இனத்தின் பூரணத்துவத்துக்கு அடிப்படை வகுத்துள்ளது. ஆனால் விஞ்ஞானம் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியைச் சமாதானமான முறையில் தீர்ப்பதற்கான ஒரு வழியைக் காணவும் முடியாது; காணப்போவதும் இல்லை. 'எலெக்ரொனிக்'கினால் இணைக்கப்பட்ட உத்வேகத்தினாலும் உலகச் சந்தையின் கேள்விகளாலும் பிரதிபலிக்கப்படும் உற்பத்தியின் உலகளாவிய இணைப்பானது, முதலாளித்துவ அமைப்பு, வரலாற்று ரீதியில் வேரூன்றியுள்ள காலவதியான் தேசிய அரச வடிவத்தின் எல்லைகளுடன் மோதிக் கொள்கின்றது. இந்த முரண்பாடு, மறுபுறத்தில் ஒரு சிறிய எண்ணிக்கையிலான முதலாளித்துவக் கும்பல் உற்பத்திச் சக்திகளின் தனியார் உடமையைக். கொண்டிருப்பதற்கும் பலநூறு கோடிக் கணக்கானோரின் உழைப்பைக் கொண்ட ஒரு உற்பத்தித் தொடரின் சமூகப் பண்புக்கும் இடையேயான அடிப்படை மோதுதலை விரைவு படுத்தி, உக்கிரமாக்குகின்றது.

7. இருபதாம் நூற்றாண்டில் இப்பூகோளத்தினை மீண்டும் மீண்டும் ஆட்டிப்படைத்த பொருளாதார வீழ்ச்சிக்கும் வன்செயல் அரசியல் வெடிப்புக்களுக்கும் அடிப்படை மூலம்களாக சமூக

படிப்பகம்

www.padippakam.com



உற்பத்திக்கும் தனியார் சொத்துடமைக்கும், உற்பத்தியின் உலகப் பண்புக்கும் தேசிய அரசு முறைக்கும் இடையேயான இந்த முரண்பாடுகளே விளங்கின. இவற்றை அடக்கிவிட எடுக்கப்பட்ட சகல முயற்சிகளுக்கும் இடையேயும் அவை திரும்பவும் வெடிக்கும் திசையில் வளர்ச்சி காண்கின்றன. ஒரு வெற்றிகரமான அனைத்துலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியூடாக முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதைத் தவிர மூன்றாம் உலக யுத்தத்தினைத் தடுப்பதற்கான வழியில்லை. யுத்தத்தினைத் தடைசெய்யும் ஏனைய சகல பிரேரணைகளும் - அணுவாயுதப் பெருக்க தடை ஒப்பந்தங்கள் ஆயுதப்பரிகரண அழைப்புக்கள் தொடக்கம் முதலாளித்துவத்துக்கு விடுக்கும் அஹிம்சை விண்ணப்பங்கள், வழிபாடுகள் வரை-ஏமாற்றுபவேலைகள் அல்லது மோசடிகள் ஆகும்.

## வரலாற்றின் படிப்பினைகள்

8. ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான பாட்டாளி வர்க்கப் போராட்டம், 20பதாம் நூற்றாண்டின் புறநிலை அனுபவங்கள், படிப்பினைகளின் ஆய்வுகளினை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். முதலாம், இரண்டாம் உலக யுத்தங்கள் இரண்டும் இறுதி ஆய்வுகளின்படி முக்கிய ஏகாதிபத்திய வல்லரசுகளிடையேயான பொருளாதார, அரசியல் தகராறுகளைத் தீர்க்கவே தொடுக்கப்பட்டன. 1914ல் வெடித்த யுத்தமானது, 19ம் நூற்றாண்டின் கடைசி மூன்று தசாப்தங்களில் முதலாளித்துவ அமைப்பின் தன்மையில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களில் வேரூன்றியிருந்தது. 1870பதுகளுக்கு முன்னர் முதலாளித்துவத்தின் பண்பாக விளங்கிய சார்பு ரீதியான சுதந்திரப் போட்டி, பிரமாண்டமான கார்ட்டல்கள், ட்ரஸ்டுகளின் கைகளில் குவிந்த பெருவாரியான உற்பத்தியால் பதிலீடு செய்யப்பட்டது. நிதி மூலதனத்தின் சகாப்தம் வந்து விட்டது. தேய்ந்து வந்த காலனித்துவம், முன்னேறிய முதலாளித்துவ நாடுகளால் உற்பத்தி செய்யப்பட்ட பெருவாரியான பண்டங்களை நுகர்வதற்கு பாதுகாக்கப்பட்ட புதிய சந்தைகளுக்கான தேவை எழுந்ததால் திடீரென வெடித்துச் சிதறும் புது மறுமலர்ச்சிக்குள்ளாகியது. 1880பதுகளில் பிரான்சிய ஏகாதிபத்திய இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான பெரி, "ஐரோப்பிய நுகர்வு உறிஞ்சப்பட்டு வருகின்றது, பூகோளத்தின் ஏனைய பாகங்களில் பெருமளவிலான புதிய நுகர்வோர்களை அதிகரிப்பது அவசியம். இல்லையேல் நாம் நவீன சமுதாயத்தினை வங்குரோத்துள் தள்ளி விடுவதோடு இருபதாம் நூற்றாண்டின் உதயத்துக்கும் தயார் செய்வோம். ஒரு பெரும் புரட்சிகரமான சமூக முடிவின் விளைவுகளை ஒருவர் கணித்துக் கொள்ள முடியாது." என எச்சரித்தார்.

www.padippakam.com



9. ஐரோப்பாவின் மாபெரும் சக்திகள் – முக்கியமாக பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி – ஆபிரிக்க, மத்திய கிழக்கு, ஆசிய மக்களை கைப்பற்றிச் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்டு, காலனித்துவப் பேரரசுகளை தேடிக்கொண்டனர். இந்நூற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்னர் பெரிதும் இளைய முதலாளித்துவச் சக்திகளான அமெரிக்காவும் யப்பானும் தமது சொந்த ஏகாதிபத்திய விரிவாக்கல் வேலைத் திட்டங்களில் இறங்கினர். உத்தியோகபூர்வமான வெளிப்பூச்சு நாகரீகங்களுக்கு இடையேயும் ஏகாதிபத்திய இராஜதந்திரம் தமது உலகப் பொருளாதார, மூலோபாய அந்தஸ்த்தினை பலப்படுத்தும் பொருட்டு தேசிய முதலாளித்துவக் குழுக்களிடையே ஈவிரக்கமற்றதும் காலவதியானதுமான போராட்டங்களை மையமாகக் கொண்டிருந்தது. ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான போட்டா போட்டிகளால் ஆயுதத் தளபாடங்கள் மேல் பிரமாண்டமாகச் செலவிடப்பட்டன. நலன்களின் பேரில் இடம் பெற்ற ஒவ்வொரு மோதுதலின் பின்னணியிலும் அகில ஐரோப்பிய யுத்தம் மட்டுமன்றி உலகளாவிய யுத்தத்தின் சாத்தியமும் கூட துங்கியிருந்தது. தமது மேலாதிக்கத்தினை ஸ்தாபிதம் செய்ய ஏகாதிபத்தியவாதிகளிடையே இடம்பெற்ற இடைவிடாத போராட்டத்தில் தூர ஒதுக்குப் பிராந்தியங்கள் கூட ஒரு மூலோபாயச் சிறப்பு முக்கியத்துவம் பெற்றுக் கொண்டன, அவை அடிக்கடி அவற்றின் உடனடிப் பொருளாதார முக்கியத்துவங்களுக்கு முதலிடம் தந்தன. ஏகாதிபத்தியச் சக்திகள் மிகவும் சிறிய மேம்பாட்டிற்காகவும் தத்தமக்கிடையே சூழ்ச்சி செய்து வந்ததால் கூட்டுக்கள் தொடர்ந்து இடம் பெயர்ந்தன. 19ம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் ‘நண்பர்களாக’ விளங்கிய பிரித்தானியாவும் பிரான்சும், வட ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் போட்டி நலன்களின் தாக்கம் காரணமாக எதிரிகளாக மாற்றப்பட்டனர், எகிப்தில் பிரித்தானிய மேலாதிக்கத்தை அங்கீகரிக்கும் பிரான்சிய தீர்மானம் மட்டுமே இரண்டு சக்திகளையும் யுத்தத்தின் விளிம்பில் இருந்து இழுத்தெடுத்ததோடு திரும்பவும் அவர்களை ‘நண்பர்களாக’ மாற்றியது. இதே சமயம் பிரான்சுக்கு எதிராக ஐக்கியப்பட்ட பிரித்தானியாவும் ஜேர்மனியும் 20பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கடும் எதிரிகளாக மாறினர். சமாதானத்தைப் பேண ஏகாதிபத்தியம் தங்கியிருந்த உடையக் கூடிய ‘சமபல சக்தியை’ முரண்பட்ட நலன்களின் அளுத்தங்கள் அடியில் உடைத்தெறிந்தன. சூடேறிய பால்கனில் ஒரு சிறிய சம்பவம் – 1914 ஜூனில் சுரஜீவா நகரில் ஆஸ்திரியப் பிரபு ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை – உலக யுத்தத்தினை வெடிக்கச் செய்தது.

10. புரட்சிகர சோசலிச இயக்கத்தின் அபிவிருத்தியானது, ஏகாதிபத்தியத்துக்கும் அதன் யுத்த வெறிக் கொள்கைகளுக்கும் எதிரான

www.padippakam.com



போராட்டத்துடன் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது. 1988ல் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டாம் அகிலத்தின் தலைசிறந்த பிரதிநிதி, ஏகாதிபத்தியம் ஒரு இரத்தம் தோய்ந்த பேரழிவுக்குக் தயாரித்து வருவதாகவும் அது தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தினால் மட்டுமே தவிர்க்கப்பட முடியும் எனவும் எச்சரிக்கை செய்தார், 1911ல் றோசா லக்சம்பேர்க் பிரகடனம் செய்ததாவது: ''உலக அரசியலும் இராணுவவாதமும்', அனைத்துலக முரண்பாடுகளை அபிவிருத்தி செய்து, தீர்த்துவைக்கும் முதலாளித்துவத்தின் குறிப்பிட்ட விதிமுறையேயன்றி வேறொன்றும் அல்ல... வர்க்க குரோதங்களை மிருதுவாக்கலாம், மொட்டையாக்கலாம் முதலாளித்துவப் பொருளாதார அராஜகங்களை அடக்கிவைக்கலாம் என யார் நம்புகிறார்களோ அவர்களே இந்த அனைத்துலக மோதுதல்களை தணிய வைக்கலாம், ஆறச் செய்யலாம், அல்லது கலைக்கலாம் என நினைக்க முடியும். முதலாளித்துவ அரசுகளின் அனைத்துலக குரோதங்கள், வர்க்க குரோதங்களின் நிரப்பிகளே. முதலாளித்துவ உற்பத்தி முறை, அராஜகத்தின் மறுபக்கமேயன்றி வேறொன்றுமல்ல. (ஒரு புரட்சிகர அனைத்துலகத்துக்கான லெனினின் போராட்டம்'' (பாத்பைன்டர் பிரஸ், நியூயோக்) இரண்டாம் அகிலத்தின் காங்கிரசுகள் - குறிப்பாக 1907ல் ஸ்ரட்கார்டிலும் 1912ல் பசலிலும் கூடிய காங்கிரசுகள் - முதல் குண்டினை யார் தீர்த்தார் என்பதைக் கணக்கிலெடுக்காமல் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் அதைத் தொடுத்த அரசாங்கத்துக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் பிரேரணைகளை நிறைவேற்றியது. பசலில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட விஞ்ஞாபனம் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அனைத்துலக பாட்டாளி வர்க்க ஐக்கியச் சக்தியை அணிதிரட்ட அனைத்து நாடுகளின் தொழிலாளர்களுக்கும் அழைப்பு விடுத்ததோடு யுத்தத்தினைத் தொடுப்பதானது புரட்சிகரப் போராட்டங்களின் எழுச்சிக்கும் இடமளிக்கும் என முதலாளி வர்க்கத்தினை எச்சரிக்கை செய்தது. ஆனால் இந்த வார்த்தைகளின் அரசியல் உள்ளடக்கம், இரண்டாம் அகிலத்தின் கட்சிகளுள் ஏற்பட்ட சந்தர்ப்பவாதத்தின் நிலையான பெருக்கத்தால் குன்றிவிட்டது. இவை தொழிலாள வர்க்கத்தின் நலன்களை மேலும் மேலும் வெளிப்படையாக முதலாளித்துவ 'தாய்நாட்டின்' நலன்களுடன் இனங்கண்டன. எனவே 1914 ஆகஸ்டில் யுத்தம் வெடித்ததும் இரண்டாம் அகிலத்தின் முக்கிய கட்சிகள் தமது பிரகடனம் செய்யப்பட்ட கொள்கைகளை மீறி, தமது முதலாளித்துவ அரசாங்கங்களின் யுத்தக் கடன்களுக்கு ஆதரவாகத் தத்தம் பாராளுமன்றங்களில் வாக்களித்தனர். இது இரண்டாம் அகிலத்தின் சரிவினைக் குறித்தது, இந்த ஏகாதிபத்தியத் தேசிய வெறி அலைக்கு சந்தர்ப்பவாதிகள் அவமானம் மிக்க முறையில் அடிபணிந்தமையை

www.padippakam.com



விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலான சோசலிஸ்டுகளே எதிர்த்தனர். இந்தப் புரட்சிகர அனைத்துலகவாதிகளில் மிகத் தூரதிருஷ்டி மிக்கவராக போல்ஷிவிக் கட்சியின் தலைவரான லெனின் விளங்கினார். அவர் ஒரு மூன்றாம் அகிலத்தினை ஸ்தாபிதம் செய்யும் அழைப்பினை விடுத்தார்.

## முதலாம் உலக யுத்தத்தின் தாக்கங்கள்

11. யுத்தத்தினைத் தொடுத்த எந்தவொரு ஏகாதிபத்திய அரசாங்கமும் யுத்தத்தின் தாக்கங்களை முன்னறிந்து கொண்டிருக்கவில்லை. ஐரோப்பா, இலட்சோப லட்சம் பேரின் சவக்காடாக மாற்றப்பட்டது. இவர்கள் யுத்தத்தினால் அல்லது நோய்களால் அழிந்தனர். இறுதியில் பிரிட்டனும், பிரான்சும் ஜேர்மன் எதிரியின் வெற்றியாளர்களாக வெளிப்பட்டன. ஆனால் அவர்களின் போலி வெற்றியின் பயங்கரச் செலவானது அவர்கள் யுத்தத்தில் காக்கச் சென்ற சகல சாம்ராஜ்யங்களின் இறுதித் தோல்வியையும் உத்தரவாதம் செய்தது. யுத்தத்தில் பலப்படுத்தப்பட்ட ஏகாதிபத்தியச் சக்தியாக அமெரிக்காவும், குறைந்தளவுக்கு யப்பானும் தோன்றின. 1914க்கு முந்திய ஐரோப்பாவின் பழைய அரசியல், சமூக சமபலநிலை ஈடுசெய்ய முடியாதவாறு சிதறுண்டு போயிற்று. முதலாம் உலக யுத்தத்தின் தீக்கனவுக்குப் பொறுப்பான ஒரு பொருளாதார அமைப்புடன் தொடர்புபடுத்துவதற்குக் கூடப் பயன்படுத்த முடியாத விதத்தில் ரூஷ்யாவில் போல்ஷிவிக்குகள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டமையானது முதலாளித்துவ 'நாகரீகத்தின்' உயிர் வாழ்க்கையையே பிரச்சினைக்குள்ளாக்கியது. தனது சொந்தக் குற்றங்களால் ஒரு சமுதாயம் குற்றவாளியாக என்றாவது காணப்பட்டிருப்பின் அது உண்மையில் முதலாளித்துவத்தால் சிருஷ்டிக்கப்பட்டதே. ஆனால் ரூஷ்ய முதலாளி வர்க்கத்தினைத் தூக்கி வீசிய கட்சியுடன் ஒப்பிடக்கூடிய ஒரு புரட்சிக் கட்சி மேற்கு ஐரோப்பாவில் எங்குமே இருக்கவில்லை. இதனால் ஆளும் வர்க்கங்கள், சமூக ஜனநாயகவாதிகளின் தீர்க்கமான உதவியுடன் திருப்பித் தாக்கக் கூடியவையாக இருந்தன. இது சோசலிசப் புரட்சிக்கு அச்சுறுத்தலாக விளங்கின. ஆனால் அவை ஐரோப்பிய முதலாளித்துவம் மீட்சியும் விஸ்தரிப்பும் பெறும் வகையிலான ஒரு புதிய சமபல அடிப்படையைச் சிருஷ்டிக்கும் நிலையில் இருக்கவில்லை. கெயின்ஸ் (Keynes)வார்த்தையில் சொன்னால் யுத்தத்தில் இருந்து தலையெடுத்த ஐரோப்பா, ஒரு பைத்தியக்கார வீட்டினை ஒத்திருந்தது.

12. 1920பதுகளின் இறுதியில் யுத்தத்தின் பின்னைய நொருங்கக் கூடிய ஒழுங்கு முறையானது நியூயோக் பங்குமுதல் சந்தையின்

www.padippakam.com



சரிவுடன் அம்பலமாகியது. இது உலகளாவிய மந்தத்தின் தொடக்கத்தினைக் குறித்தது. அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு திறமைவாய்ந்த புரட்சிகரத் தலைமை இருந்திருக்குமானால் சோசலிசப் புரட்சியின் வெற்றி, ஐரோப்பா முழுவதிலும், இறுதியாக உலகிலும் உத்தரவாதம் செய்யப்பட்டிருக்கும். ஆனால் 1919ல் லெனின் தலைமையில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் அகிலம், 1930பதுகளின் தொடக்கத்தில் ஒரு பயங்கரச் சீரழிவுக்குள்ளாகியது. 'ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற பிற்போக்குக் கோட்பாட்டின் அடிப்படையில் ஸ்டாலினின் தலைமையிலான சோவியத் அதிகாரத்துவம், கம்யூனிஸ்ட் அகிலத்தினை உலக ஏகாதிபத்தியத்துடனான கிரேம்ளின் இராஜதந்திரச் சூழ்ச்சிகளின் ஒரு கருவியாக்கினர். ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் மேல் கிரேம்ளின் கொண்டிருந்த பிடியானது ஒரு தொகைப் பேரழிவுகளுக்கு இட்டுச் சென்றது. எல்லாவற்றுக்கும் மேலாக 1933 ஜனவரியில் நாசிகள் ஆட்சிக்கு வந்தனர். இந்த வரலாற்றுக் காட்டிக் கொடுப்பே ட்ரொட்ஸ்கியை நான்காம் அகிலத்தினை ஸ்தாபிக்கும் அழைப்பினை விடுக்கச் செய்தது. ஆனால் தனிமைப்படுத்தல்கள், ஸ்டாலினின் இரகசியப் பொலிஸாரால் மட்டுமன்றி பாசிஸ்டுகளதும், 'ஜனநாயக' ஏகாதிபத்தியவாதிகளதும் இடைவிடாத கொலைகளின் நிலைமைகளின் கீழ் நான்காம் அகிலத்தினால் பிற்போக்கின் அலைவீச்சைப் பின்வாங்கச் செய்ய இயலவில்லை. ஹிட்லரின் வெற்றியைத் தொடர்ந்து வந்த வருடங்களில் அவுஸ்திரேலிய, பிரான்சியப் பாட்டாளி வர்க்கங்களும் இறுதியில் ஸ்பெயின் பாட்டாளி வர்க்கம் காட்டிக் கொடுக்கப்பட்டமையும் இரண்டாம் ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் வெடிப்புக்கான பாதையைத் திறந்தன.

## இரண்டாம் உலக யுத்தம்

13. ஜேர்மனி 21 ஆண்டுகளுக்கு முன்னரான தோல்வியின் விளைவுகளை பின்வாங்கச் செய்து, ஐரோப்பாவில் தனது ஆளுமையை நிலைநாட்டும் ஒரு முயற்சியாக 1939 செப்டம்பரில் யுத்தத்தினை ஆரம்பித்தது. எவ்வாறெனினும் இரண்டு ஆண்டுகள் சற்று அதிகரிப்பதற்குள் யுத்தம் ஒரு உலகளாவிய மோதுதலாகப் பரிணாமம் செய்யப்பட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் இரு நீண்ட போராட்டத்துக்கும், அத்திலாந்தித் சமுத்திரத்தில் அமெரிக்காவுடனும் போரிட அவசியப்பட்ட வளங்களைப் பெறும் பொருட்டு ஹிட்லர் ஸ்டாலினுடனான ஆக்கிரமிப்பில்லா உடன்படிக்கைகளை இரத்துச் செய்துவிட்டு, தனது இராணுவத்தினை 1941 ஜூனில் சோவியத் யூனியனுக்கு எதிராகத் திருப்பினான். இதற்கிடையே யப்பானிய ஏகாதிபத்தியம் தனக்கு ஆசியாவில் கிடைத்த வெற்றிகளுக்கு இடையேயும்

www.padippakam.com



பசுபிக்கில் அமெரிக்க ஆதிக்கத்தைச் சவால் செய்யாமல் முக்கிய மூலப் பொருட்கள் கிடைப்பதை உத்தரவாதம் செய்ய வழி கிடையாது என்பதை உணர்ந்தது. அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் அது தமக்கிடையேயான வேறுபாடுகளை யப்பானுடன் சமாதானமான வழியில் தீர்த்துக் கொள்ளுவதற்கான சாத்தியங்களை அடைத்து மூடுவதற்குத் தனது சக்திக்குட்பட்ட சகலதையும் செய்தது. பேர்ள் துறைமுகம் மீதான தாக்குதல், ரூஷ்வெல்ட் நிர்வாகத்துக்கு யப்பானுடன் கணக்கு வழக்குகளைத் தீர்த்துக் கொள்ள நீடித்துவந்த வாய்ப்பினையும் ஐரோப்பாவில் இடம்பெறும் யுத்தத்தில் நுழையவும் இறுதியாக வாய்ப்பளித்தது.

14. ரூஷ்வெல்டினதும், சேர்ச்சிலதும் ஜனநாயக 'பாசிச எதிர்ப்பு' வாயடிப்புக்களுக்கு மத்தியிலும் அமெரிக்க, பிரித்தானிய யுத்த இலக்குகளுக்கு அடிப்படையாக விளங்கிய புறநிலை நலன்கள். ஜேர்மன், யப்பானிய ஏகாதிபத்திய நலன்களுக்கு ஒன்றும் குறைந்தவை அல்ல. பிரித்தானியா தனது பரந்த ஏகாதிபத்தியச் சொத்துக்களை தன்னால் முடிந்த மட்டும் காப்பாற்றிக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்தது. அமெரிக்கா, முன்னணி ஏகாதிபத்தியச் சக்தியாகத் தனது அந்தஸ்தினை நிலைநாட்டும் நோக்கம் கொண்டிருந்தது. சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் மட்டுமே ஹிட்லருக்கு எதிரான போராட்டம், கிரேம்ளின் அதிகாரத்துவத்தின் நம்பிக்கை மோசடிகளுக்கிடையேயும் ஒரு நிச முற்போக்கு, ஏகாதிபத்திய எதிர்ப்பு மூலகத்தினை உள்ளடக்கிக் கொண்டிருந்தது. ஜேர்மன் ஏகாதிபத்தியம் சோவியத் யூனியனைக் கைப்பற்றி, அக்டோபர் புரட்சியின் அடிப்படையில் 1917ல் நிலைநிறுத்தப்பட்ட தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளை நிர்மூலமாக்கியிருக்குமானால் அது சோவியத், அனைத்துலக தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு உச்சியடி மிக்க தோல்வியை பிரதிநிதித்துவம் செய்திருக்கும். தமது புரட்சியைப் பேணுவதில் சோவியத் மக்கள் கொண்டிருந்த திடசங்கற்பம் – நாசி படைகளைத் தோற்கடிக்க அவர்கள் செய்த பிரமாண்டமான தியாகங்களை விளக்குகின்றன.

15. எவ்வாறெனினும் சோவியத் மக்களின் வீரியங்களுக்கு இடையேயும் யுத்தத்தினை வழிநடாத்தக் கிரேம்ளின் கடைப்பிடித்த கொள்கைகள் அடிப்படையில் பிற்போக்குப் பண்பு கொண்டவை. பிரித்தானிய, அமெரிக்க 'ஜனநாயக' ஏகாதிபத்தியவாதிகளுடன் அணிதிரண்ட சோவியத் அதிகாரத்துவம், யுத்தத்தின் முடிவில் ஒரு பொதுப் புரட்சிகரக் கிளர்ச்சி வெடிக்கும் சாத்தியத்தினையிட்டு அஞ்சியது. ஜேர்மன், இத்தாலி, பிரான்சில் சோசலிசப் புரட்சி அல்லது அந்த இலக்கில் யுத்தத்தினால் சிதறடிக்கப்பட்ட எந்தவொரு முதலாளித்துவ அரசும் சோவியத் தொழிலாள வர்க்கத்துக்கு மின்சக்தி வழங்கும் எனவும், அது கிரேம்ளின் மாபியாவுடனான கணக்கு

www.padippakam.com



வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளத் தூண்டும் எனவும் ஸ்டாலின் கணித்தான். எனவே ஸ்டாலின், சேர்ச்சில், ரூஷ்வெல்ட் (1945 - ஏப்ரலில் பின்னையவரின் மரணத்தின் பின்னர்) ட்ரூமனுக்கிடையே தெஹ்ரான், யால்டா, போஸ்டாம் முதலான இடங்களில் நடைபெற்ற ஒரு தொகை மகாநாடுகளின் பின்னர் சோவியத் பிராந்தியங்களில் தலையிடாதிருக்கச் செய்யும் திட்டவட்டமான வாக்குறுதிக்குப் பதிலாக மேற்கு ஐரோப்பாவிலும் மூலோபாய முக்கியத்துவம் காரணமாக கிரீசிலும் முதலாளித்துவ ஆட்சியைக் காப்பதில் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கும் என்பதை கிரேம்ளின் தெளிவு படுத்தியது. பின்னர், சேர்ச்சில் தமது நினைவுக் குறிப்புக்களில் 1944ல் மொஸ்கோவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் போது தாம் எங்ஙனம் ஒரு காகிதத்துண்டில் யுத்தத்தின் பின்னைய ஐரோப்பிய அரசியல் பிராந்திய பிரிவினையைக் கோடிட்டுக் காட்டியதை நினைவு கூர்ந்துள்ளார். கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான பிரிவினைகள் நாசி ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தினை முன்னெடுத்ததோடு, கிரீசிலும் ஆட்சியைக் கைப்பற்றும் நிலையில் இருந்தது. இது சேர்ச்சிலின் கோட்டில் பிரித்தானிய செல்வாக்குப் பிராந்தியத்தில் இருந்து வருவதாகக் குறிக்கப்பட்டிருந்தது. சேர்ச்சில் எழுதியதாவது: நான் இதை ஸ்டாலின் பக்கம் தள்ளினேன், அச்சமயம் அவர் மொழிபெயர்ப்பைக் கேட்டுக் கொண்டிருந்தார். அங்கு சற்றுத் தயக்கம் காணப்பட்டது, பின்னர் அவர் தமது நீலப் பென்சிலை எடுத்து அதன் மேல் ஒரு பெரிய குறிபோட்டு எம் பக்கம் திருப்பி அனுப்பினார். தீர்ப்பதற்கு எடுக்கும் நேரத்தைவிடக் குறைந்த நேரத்துள் அவை எல்லாமே தீர்க்கப்பட்டன.

## யுத்தத்தின் பின்னைய ஒழுங்குமுறை

16. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதலாளித்துவம் முதலாம் உலக யுத்தத்தினைத் தொடர்ந்து அடைய முடியாததை - அதாவது முதலாளித்துவ ஒழுங்குமுறையைப் புதுப்பிக்கவும் விரிவுபடுத்தவும் அடிப்படையான ஒரு உறுதியான சமபல நிலையை அடைவதில் முதலாளி வர்க்கம் வெற்றி கண்டது. முதலாம் உலக யுத்தத்தின் வெடிப்பு முதலாளித்துவம் ஒரு உலக அமைப்பு என்ற முறையில் அதன் விவகாரங்களில் ஒரு நீண்ட ஸ்திரமற்ற காலப் பகுதியின் தொடக்கத்தைக் குறித்தது. உலகப் பொருளாதாரத்தின் இடைநிலைத் தொழிற்பாட்டு பகுதிகளுக்கு இடையேயும், முதலாளித்துவ அரசுகளுக்கு இடையேயும் அத்தோடு முதலாளித்துவ நாடுகளின் உள்ளே சமூக வர்க்கங்களுக்கு இடையே உறவுகளை ஒழுங்குபடுத்தும் நுண்மையான பொறிமுறையில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் கட்டுப்படுத்த முடியாத சரிவு ஏற்பட்டது. இரண்டாம் உலக

www.padippakam.com



யுத்தத்தின் முடிவைத் தொடர்ந்து அது இறுதியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொணரப்படும் வரை உலக முதலாளித்துவ அமைப்பு 3 தசாப்தங்களுக்குத் தொடர்ந்து உருகி வந்தது.

17. சமபல நிலையைப் புனருத்தாரணம் செய்வதற்கு அவசியமான அரசியல் முன்நிபந்தனைகள், கிரேம்ளின் அதிகாரத்துவத்தினதும் அதன் துணைக்கோள் கட்சிகளதும் துரோகத்தினால் வழங்கப்பட்டன, அவர்கள் ஐரோப்பாவிலும் அனைத்துலகிலும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களைப் மும்முரமாக எதிர்த்து நாசமாக்கினர். பிரான்சிலும் இத்தாலியிலும் ஸ்டாலினிஸ்டுகள் தமது சக்தியை செல்வாக்கிழந்த முதலாளி வர்க்கத்தினை புனருத்தாரணம் செய்வதிலும் முதலாளித்துவ அரசினை மறுநிர்மாணம் செய்வதிலும் செலவிட்டனர். கிழக்கு ஐரோப்பாவில் அவர்களின் பாத்திரம் முக்கியத்துவம் குறைந்ததாக இருக்கவில்லை. மேற்கு ஐரோப்பாவில் போலவே சோவியத் யூனியனின் அரசியல் தலைமீடு, எல்லாவற்றுக்கும் மேலாகத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகவும் ஒரு நிச சோசலிசப் புரட்சியின் சாத்தியத்திற்கு எதிராகவும் திருப்பப்பட்டது, கிரேம்ளின், தொழிலாளர் இயக்கத்தினைக் கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்து, பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை சோவியத் அதிகாரத்துவத்திற்கும் உலக ஏகாதிபத்தியத்துக்கும் இடையேயான கொடுக்கல் வாங்கல்களுக்கு கீழ்ப்படுத்துவதிலேயே முக்கிய அக்கறை காட்டியது. இறுதியில் கிரேம்ளின் தான் முதலில் – எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக தூரம் செல்லத் தள்ளப்பட்டது. ஸ்டாலினிசக் கட்சிகள் ஆட்சியைத் தங்கள் கைகளுக்குள் போட்டுக் கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டது. உள்ளூர் முதலாளி வர்க்கத்தினைப் பறிமுதல் செய்தது பற்றி ஏகாதிபத்தியவாதிகளின் முறைப்பாடுகள் கிளம்பிய போதிலும் கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிச மேலாதிக்கம், ஒட்டோமன் சாம்ராஜயம் வீழ்ச்சி கண்டதன் பின்னர், இப்பிராந்தியத்தில் நிலவியிராத ஒரு அரசியல் ஒழுங்குமுறை அந்தஸ்தினைத் திணிக்கக் காரணமாகியது. ஆழமாக வேரூன்றிய அதன் சமூக முரண்பாடுகள் 1900–1945க்கும் இடையே ஐரோப்பாவில் பொது ஸ்திரமின்மைக்குப் பெரும் அளவில் பங்களிப்புச் செய்தன. அத்தோடு ஐரோப்பா பிரிவினை செய்யப்பட்டமையும் சிறப்பாக ஜேர்மன் பிரிவினை செய்யப்பட்டமை ஏகாதிபத்தியவாதிகளின் உடனடி நலன்களுக்குச் சேவகம் செய்தது. 30 ஆண்டுகளுக்கும் குறைவான கால இடைவெளிக்குள் இரண்டு உலக யுத்தங்களுக்கு இட்டுச் சென்ற முரண்பாடுகளைச் சாந்தப்படுத்த எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளையும் வரவேற்க அவர்கள் ஆர்வம் காட்டினர். ஜேர்மனி துண்டாடப்பட்டமை, இந்த உள்ளார்ந்த சக்தி வாய்ந்த அரசினை யுத்தத்தின் பின்னைய ஐரோப்பாவின் கட்டுமானத்துள் இணைக்கும் குழம்பிய பிரச்சினைக்கு

www.padippakam.com



ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஓர் பதில் வழங்கியது. மேலும் யுத்தத்தின் பின்னைய அரசியல் தீர்வுகள், ஐரோப்பிய அரசுகளைக் கிழக்கு, மேற்காகப் பிரித்ததோடு தொழிலாள வர்க்கத்தையும் கூடவே பிளவுபடுத்தின. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தினை முள்ளுக்கம்பி, கொங்கிரீட் சுவர்கள், சுரங்கவயல்கள் கொண்டு காட்டுமிராண்டித்தனமாக பிளவு படுத்தியதானது, சோசலிசத்துக்கான போராட்டத்திற்கு அரசியல் காரணி மிகவும் தீர்க்கமானது என்பதை நிரூபித்தது.

*18.* உலக யுத்தத்தின் பின்னர் உருவான புரட்சிகர அச்சுறுத்தலை ஒடுக்கியமையானது ஐரோப்பாவில் முதலாளித்துவ ஆட்சிக்கான மறுநிர்மாணத்துக்குப் புதியதோர் அத்திவாரத்தைத் தயாரிப்பதற்கான ஒரு வாய்ப்பினை ஏகாதிபத்தியத்திற்கு வழங்கியது. அது இல்லாமல் ஏகாதிபத்தியம் ஒரு உலக அமைப்பு என்ற முறையில் உயிர் பிழைப்பது சாத்தியமாகியிராது. இங்கு அமெரிக்கா தீர்க்கமான பாத்திரத்தினை வகித்தது. 1945ன் பின்னர் அதன் பிரமாண்டமான கைத்தொழில் சக்தியையும் பரந்தளவிலான பொருளாதாரக் கையிருப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு தலைமைப் பாத்திரத்தினை வகிக்க அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு இருந்த வல்லமை முதலாம் உலக யுத்தத்தின் முடிவில் உலக முதலாளி வர்க்கம் இட்டு நிரப்ப முடியாது நழுவிய அதை: அதாவது, முதலாளித்துவ அரசுகளுக்கு இடையே புதிய உலகச் சமபலத்தினை அடையும் பொருட்டு தீர்க்கமான அரசியல் பொருளாதார நெம்புகோலை வழங்கியது. இரண்டு உலக யுத்தங்களுக்கு இட்டுச் சென்ற ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான கசப்பான போட்டியானது இறுதியில் உலக ஏகாதிபத்தியத்தின் விவகாரங்களை நிர்வகிக்கும் சர்ச்சைக்கிடமற்ற நடுவராக அமெரிக்காவைத் தோன்றச் செய்தது. இது மார்ஷல் திட்டம், (Marshal Plan) நேட்டோ, அதனுடன் தொடர்புடைய இராணுவ உடன்படிக்கைகள், ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, வரி, வர்த்தகம் பற்றிய பொது உடன்படிக்கை போன்ற அரசியல், பொருளாதார நிறுவனங்களைச் சிருஷ்டித்தது. இவை யுத்தத்தின் பின்னைய உலக முதலாளித்துவம் உயிர் பிழைக்கவும், பரவவும் அத்திவாரத்தினை வழங்கின.

## யுத்தத்தின் பின்னைய ஒழுங்குமுறையின் நெருக்கடி

*19.* அமெரிக்காவின் பொருளாதார மேலாதிக்கத்தினைச் சவால் செய்யக்கூடிய வேறு ஒரு முதலாளித்துவ அரசோ அல்லது முதலாளித்துவ அரசுகளின் கூட்டோ இல்லாதிருந்ததாலும் சோவியத்

www.padippakam.com



யூனியனுடன் மோதிக்கொள்ளும் நிலையில் அனைத்துலக முதலாளித்துவம் அமெரிக்க இராணுவ பலத்திலும் தங்கியிருந்ததாலும் உலக முதலாளித்துவ யுத்தத்தின் பின்னைய தீர்வுகளின் அடிப்படையில் அதன் சமபலத்தினைப் பராமரித்துக் கொள்ள முடிந்தது. எவ்வாறெனினும் உலக வர்த்தகத்திற்குப் புத்துயிரளிப்பதிலும் ஐரோப்பிய, யப்பானிய முதலாளித்துவத்தினை திரும்பக் கட்டி எழுப்புவதிலும் அது கண்ட வெற்றிகளே, உலக அமைப்பின் உறுதிப்பாடு தங்கியிருந்த சமபலத்தினை உறுதியாகப் பாதித்தது. அமெரிக்காவின் பொருளாதார மேலாதிக்கத்தில் ஏற்பட்ட படிப்படியான வீழ்ச்சி, 1950பதுகளின் கடைப்பகுதியில் செலாவணி, வர்த்தக பற்றாக்குறைகளின் அதிகரிப்பாகப் பதிவாகியது. 1971ல் அமெரிக்கா, யுத்தத்தின் பின்னைய பொருளாதார முறையின் இணைப்பாணியாக விளங்கிய டாலர் - தங்கம் மாற்றுமுறையைக் கைவிடும் வண்ணம் நெருக்கப்பட்டது. ஒன்றின் பின் ஒன்றாக கைத்தொழில்களில் அமெரிக்க மேலாதிக்கம் தாக்குதலுக்கு உள்ளாகியது. 1970பதுகளிலும் 1980பதுகளிலும் அமெரிக்க வருடாந்த வர்த்தகப் பற்றாக்குறை - குறிப்பாக யப்பான் தொடர்பாக ஈடாட்டம் காணத் தொடங்கியது. 1985ல் அமெரிக்கா, முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் முதற்தடவையாக ஒரு தேசிய கடனாளி நாடாகியது. அமெரிக்காவின் உலக அந்தஸ்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, யுத்தத்தின் பின்னைய சமபலத்தின் தாக்கிப்பிடிக்கும் தன்மையைத் தவிர்க்க முடியாத முறையில் பிரச்சினைக்குள்ளாக்கியது. மோசமடைந்து வந்த வர்த்தகத் தகராறுகளும் பிராந்தியக் கூட்டுக்களிடையே (வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா) உலகச் சந்தை பிரியுண்டமையும் இரண்டாம் உலக யுத்தத்துக்கு முன்னைய வருடங்களின் வர்த்தக யுத்தத்தின் பண்பினைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

20. மேலும் விஞ்ஞானத்திலும், தொழில் நுட்பத்திலும் ஏற்பட்ட அபிவிருத்திகள் உலக முதலாளித்துவத்தின் மறு உறுதிப்பாட்டுக்கு ஒரு தீர்க்கமான மூலகமாகின. பொருளாதாரச் சமபல நிலையின் அசைவுகள் முதலாளித்துவ அரசுகளுக்கு இடையேயான மோதுதலை உக்கிரமாக்குவதோடு அவற்றை மேலும் தள்ளி வைக்கின்றது. விதிமுறைகளிலும் உற்பத்தி சாதனங்களிலும் வரைவு, திட்டமிடல், போக்குவரத்து, செய்தித் தொடர்புகள் ஆகியவற்றில் 'மைக்ரோசிப்' புரட்சியானது உலகப் பொருளாதாரத்தினை முன்னொரு போதும் இல்லாத முறையில் ஒன்றிணைத்துள்ளது. ஒரு பொருளாதார நிலைப்பாட்டில் இருந்து இந்த நவீன ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனம் தேசிய அரசின் பழையதும் இழைத்ததுமான அளவு கோலை முழுமனே தாண்டி வளர்ந்து விட்டன. இதன் பணிப்பாளர்கள், உலக உற்பத்தி, உலக சந்தை, உலக நிதி, உலக வளங்கள் என்ற

www.padippakam.com



அடிப்படையில் சிந்தித்துச் செயற்பட நெருக்கப்பட்டுள்ளார்கள். உள்நாட்டுச் சந்தைக்கும் உலகச் சந்தைக்கும் இடையேயான பழைய வேறுபாடுகள் இத்தொடரில் இருந்து மறைந்து வருகின்றன. நவீன ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் அதன் உள்நாட்டு தளத்தின் புவியியல் இருப்பிடத்தைப் பாராமல் உலகச் சந்தையின் மேலாதிக்கத்துக்காக சாவுக்கும் வாழ்வுக்கும் இடையேயான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. ஆனால் தேசிய அரசு என்ற வகையில் அதன் புறநிலைப் பொருளாதார முக்கியத்துவத்தினை அது இழந்து கொண்டு வருகையிலும் போட்டி தேசிய முதலாளித்துவக் கும்பல்களிடையே அரசியல் இராணுவக் கருவி என்ற வகையில் உலக ஆளுமைக்கான போராட்டம் பேரளவில் வளர்ச்சி காண்கின்றது. இந்த உண்மை, ஒரு புதிய உலகத் தீப்பிளம்புக்கான தீவிரம் கண்டுவரும் தயாரிப்புக்களில் நன்கு பலம் வாய்ந்த முறையில் வெளிப்பாடாகின்றது.

## ஏகாதிபத்தியங்களிடையேயான குரோதத்தின் வளர்ச்சி

21. முதலாளித்துவத்தின் பிரமாண்டமான உலகளாவிய பரம்பரைக்கு அரசியல் அடிப்படையை வழங்கிய ஏகாதிபத்தியத்தின் யுத்தத்தின் பின்னைய சமபலம் உடைந்து சரிந்துள்ளது. பழைய சமபலத்தினைக் கொண்டிருந்த சகல இணைப்புப் பாகங்களுக்கும் இடையேயான உறவுகள் பரிணாமம் செய்யப்பட்டு விட்டதால் இதனைச் சமாதான வழியில் புதுக்கி அமைத்துவிட முடியாது. இது முதலாளித்துவ அரசுகளின் தனிப்பட்ட தலைவர்களின் அகநிலை விருப்பம் பற்றிய ஒரு விடயம் அன்றி, அவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பொருளாதார, சமூக முரண்பாடுகளின் புறநிலை விளைவுகளாகும்.

22. உலக ஏகாதிபத்தியத்தின் சமபலமின்மையின் மத்தியில் அமெரிக்காவின் நெருக்கடி உள்ளது. முதலாளித்துவத்தின் கீழ் எதையெல்லாமோ ஈட்டிக்கொள்ள முடியும் என்பதற்கு சோவியத் அதிகாரத்துவம் அமெரிக்காவை ஒரு உதாரணமாக மகோன்னதப்படுத்திக் காட்டிக் கொண்டுள்ள தருணத்திலேயே வரலாற்றின் இந்த விசித்திரமான திருவிளையாடல் இடம் பெற்றுக் கொண்டுள்ளது. 'சுதந்திர முயற்சி' முறையின் சகல நிறுவனங்களையும் அழுகிக் கெடுக்கும் ஒரு சமூக நெருக்கடியினால் அமெரிக்கா பீடிக்கப்பட்டுள்ளது. 16 ஆண்டுகளுள் மூன்றாவது பிரமாண்டமான பொருளாதாரப் பின்னடைவானது 1980பதுகளில் பேரளவிலான கடன்களின் அடிப்படையில் பெருப்பிக்கப்பட்ட எண்ணற்ற வங்கிகளையும், கூட்டுத்தாபனங்களையும்,சரித்து வீழ்த்த அச்சுறுத்திக் கொண்டுள்ளது.

www.padippakam.com



பழைய சீர்திருத்தவாதக் கைமருந்துகளான புதிய கொடுக்கல் வாங்கல்கள், புதிய எல்லைகள், மாபெரும் சமுதாயம் எல்லாம் நீண்ட கடந்த காலத்துக்கு உரியனவாகி விட்டன. எந்தவொரு முக்கியத்துவம் வாய்ந்த சமூகச் சட்டமும் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகக் காங்கிரசில் இயற்றப்படவில்லை. பழைய சமூக வேலைத்திட்டங்களில் எஞ்சிக்கிடந்தவற்றை பிரமாண்டமான வரவு செலவு திட்ட வெட்டுக்கள் அழித்துவிட்டன. குற்றங்கள் பற்றிய புள்ளி விபரங்கள் சமூக உறவுகளின் உயிராபத்தான அறிகுறியினை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. துரிதமாகப் பெருகிவரும் வேலையின்மையும், தொழிலில் இன்னும் உள்ளவர்களின் சம்பள வீழ்ச்சியும் கல்வி, வீடமைப்பு, சுகாதார வசதிகளின் நிலைமையும் பேரழிவுக்கு ஒன்றும் குறைந்ததல்ல. சனத்தொகையின் மூன்றில் ஒரு பங்கினர் நடைமுறையில் கல்வியற்றவர்களாக உள்ளனர். வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் கூட சமூக நெருக்கடியின் தாக்கத்தினால் அழிக்கப்பட்ட வாழ்க்கைகளின் பயங்கரக் கதைகளைத் தினசரி அறிவிக்காமல் இருக்க முடியாதுள்ளது: காட்போட் பெட்டிகளுக்குள் வீடற்ற மக்கள் முடங்கிக் கிடத்தல், வைத்திய காப்புறுதி இல்லை என்பதற்காக புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை மறுக்கப்பட்டமை, வேலையற்ற தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் தற்கொலை. அமெரிக்காவின் அரசியல் தலைவர்கள் அதன் சமூக அமைப்புக்களது சீரழிவினையும், சனத்தொகையின் பரந்தளவிலான தட்டினரின் வறுமையையும் கட்டுப்பாட்டுக்குள் கொணர எதுவும் செய்ய முடியாது என்ற முடிவுக்கு நீண்ட காலத்துக்கு முன்பேவந்துவிட்டனர் என்ற நன்கு பிரபல்யமான ஒரு உண்மையை வெகு சாதாரணமாக அறிவிப்பது போல் ஒரு முன்னணி முதலாளித்துவப் பத்திரிகையின் நிருபர் குறிப்பிட்டிருந்தார். சமூக உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு அமெரிக்க முதலாளி வர்க்கம் பொலிசாரிலும் தொழிலாளர் இயக்கத்தில் உள்ள ஏஜன்டுகளின் வரையறையற்ற துரோகத்திலும் தங்கியிருக்கும்படி தள்ளப்பட்டுள்ளது. தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான போராட்டத்தின் ஒவ்வொரு அடையாளத்தையும் நசுக்கி ஒடுக்குவதே அவர்களின் சமூகத் தொழிற்பாடாகும்.

23. மோசமடைந்து வரும் சமூக நெருக்கடியின் பின்னணியிலும் அதன் ஆழமான புரட்சிகர எதிர்விளைவுகளிடையேயும் உலக ஆளுமையில் அதனது அந்தஸ்தினை புதுப்பிக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் தள்ளப்பட்டுள்ளமையானது உலக அரசியலில் வெடித்துச் சிதறும் தனியொரு போக்காக விளங்குகின்றது. அமெரிக்காவின் அனைத்துலகக் கொள்கையானது ஐரோப்பிய, யப்பானிய போட்டியாளர்களின் செலவில் தனது பொருளாதார நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதிலேயே

www.padippakam.com



கவனம் செலுத்தப் படுகின்றது. ஒரு ஆண்டுக்குச் சற்றுக் கூடிய காலத்துள் புஷ் நிர்வாகம் இரண்டு தடவை - முதலில் பனாமாவுக்கு எதிராகவும் பின்னர் ஈராக்குக்கு எதிராகவும் - யுத்தத்துக்குச் சென்றுள்ளது. இறுதி ஆய்வுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அதிகரித்த அஜாக்கிரதையும் யுத்த வெறியும் இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதன் மூலம் தனது பொருளாதார வீழ்ச்சியை சீர்செய்யவும் பின்னடிக்கச் செய்யவும் முயல்வதைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்த இராணுவ பலத்தில் மட்டுமே அமெரிக்கா பிரச்சினைக்கு இடமற்ற ஆதிக்கத்தினை இன்னமும் பிரயோகிக்கின்றது. குவைத்தின் விடுதலையைக் காட்டிலும் அமெரிக்காவுக்குப் பெரிதும் முக்கியமானது, அமெரிக்க ஆயுதங்களின் அழிவுத் தன்மையை அனைத்துலகுக்கு காட்ட ஒரு சந்தர்ப்பம் வழங்குவதே. யுத்தத்தின் போது புஷ் பாரசீக வளைகுடா எண்ணெய்யில் அமெரிக்கா முக்கிய வர்த்தகப் போட்டியாளர்களில் தங்கியுள்ளதைப் பகிரங்கமாகச் சுட்டிக் காட்டியதோடு யுத்தம் அமெரிக்காவின் 'தன்வயமாக்கலைக்' கூட்டி 'அமைதியான வர்த்தக உறவுகளுக்கு இட்டுச் செல்லும்' எனச் சிபார்சு செய்தார். உண்மையில் ஐரோப்பியர்கள் ஜப்பானியர்கள் இடமிருந்து அதிக சலுகைகளைப் பிடுங்கிக் கொள்ள இராணுவ பலத்தைப் பாவிக்க முடியும் என்ற கருத்து அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பரந்த பிரிவினரிடையே செல்வாக்குப் பெற்றுள்ளது. யுத்தத்தின் முடிவில் 'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' 'பலாத்காரம், கொள்கையின் ஒரு நியாயமான ஆயுதம். அது செயற்படுகின்றது' எனப் பிரகடனம் செய்தது.

24. புஷ்சின் பகட்டான 'புதிய உலக விதிமுறை' பற்றிய வாயடிப்புக்களுக்கு இடையேயும் அமெரிக்கா உலக முதலாளித்துவத்தின் விவகாரங்களில் தனது ஆளுமை அந்தஸ்தினை மீண்டும் நிலைநாட்ட அவசியமான சட மூலவளங்கள் இல்லாதுள்ளது. யுத்தத்தின் செலவினங்களை நிதியீட்டம் செய்ய தனது கூட்டுக்களை பணத்துக்காக ஆட்டிப்படைத்தமையானது அமெரிக்காவின் இராணுவப் பகட்டுக்களுக்கும் அதன் நிதி வளங்களுக்கும் இடையேயான சமத்துவமின்மையை உலகின் கவனத்துக்குக் கொணர்ந்தது. மேலும் பாதுகாப்பற்ற பக்தாத்தின் மேல் குண்டுவீசுவது, நவீன தொழில்நுட்பம் அடிப்படையாகக் கொண்டுள்ள பண்டங்களை 'செமிகொன்டக்டர்ஸில்' யப்பான் உலகச் சந்தையில் கொண்டுள்ள முன்னணி அந்தஸ்தினை அமெரிக்கா திரும்பக் கைப்பற்றுவதைவிடச் சுலபமானது. ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையேயான உறவுகளில் ஒரு புதிய சமபலத்தினை சிருஷ்டிப்பதற்கு மாறாக யுத்தம் பழையதின் மரணத்தினை ஊர்ஜிதம் செய்து நிரூபித்துள்ளது. அமெரிக்கப் பொருளாதாரப் பலவீனங்கள் வெளிப்படையாகியதும் ஐரோப்பிய, ஜப்பானிய முதலாளி வர்க்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com



தமது சொந்த நலன்களை மிக மூர்க்கமாக வலியுறுத்துகின்றன. 'பாலைவனப் புயலின்' வெற்றியைத் தொடர்ந்து அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் வெற்றிக் கூச்சல்கள், மத்திய கிழக்கில் தமது சொந்த மூலோபாய நலன்களைக் காக்கும் பொருட்டு குர்திஷ்களின் நிலைமையை ஐரோப்பிய முதலாளி வர்க்கம் வெற்றிகரமாகச் சுரண்டிக் கொள்கின்றது என்பதை புஷ் நிர்வாகம் உணர்ந்து கொண்டதும் திடீர் முடிவுக்குக் கொணரப்பட்டன. பாரசீக வளைகுடாவிலும் ஈராக்கின் தெற்கு எல்லையிலும் நிலை கொண்டிருந்த அமெரிக்கப் படைகளை எதிர்கொள்வதற்குப் போன்று ஐரோப்பியர்கள் தமது படைகளை வட ஈராக்கினுள் நகர்த்தத் தொடங்கினர். ஐரோப்பிய, யப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்காவின் கைகளில் தமது தலைவிதியை விட்டு வைக்க நினைக்கவில்லை. யுத்தத்தின் பின்னர் ஐரோப்பியர்கள், அமெரிக்கா இன்னமும் முன்னணிப் பாத்திரம் வகிக்கும் 'நேட்டோ' அமைப்பில் இருந்து சுயாதீனமாகத் தமது சொந்த அதிரடிப் படைகளை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளனர். ஜேர்மன் ஆளும் வர்க்கம் 21ம் நூற்றாண்டின் உலக விவகாரங்களில் தனது அந்தஸ்து 20பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் அடைந்த இராணுவத் தோல்வியால் நிர்ணயம் செய்யப்படுவதை அங்கீகரிக்க முடியாது என்பதைத் தெளிவு படுத்தியது. குர்திஷ்களுக்கு மனிதாபிமான உதவி வழங்கும் சாட்டில், ஜேர்மன் இராணுவம், ஹிட்லரின் வேர்மட் தோல்வியின் பின்னர் முதற் தடவையாக ஐரோப்பாவுக்கு வெளியே தனது முதல் நடவடிக்கையை ஆரம்பித்தது. நேட்டோ ஜேர்மன் செயலாளர் நாயகமான மான்பிரட் வோர்ணர் பழைய பிஸ்மாக்கின் 'இரத்தமும் இரும்பும்', பேச்சினை ஞாபகப்படுத்தி, 'வாளில்லாமல் இராஜதந்திரம் மலடாகிப் போன சமயங்களும் உண்டு' எனப் பிரகடனம் செய்தார். அதே சமயத்தில் யப்பானிய அரசாங்கம் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் தனது படைகளை தனது சொந்த எல்லைக்கு அப்பால் முதலாவதாக நிறுத்தத் தொடங்கியது.

25. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவினைத் தொடர்ந்து அனைத்துலக உறவுகளில் இவ்வளவுக்கு ஸ்திரமின்மை நிலவிவந்ததில்லை. குளிர் யுத்த காலத்தில் அனைத்துலக இராஜதந்திரம் பெருக்கெடுத்த அனுமானிக்கக் கூடிய வழிகளைச் சம்பவங்கள் தாண்டிச் சென்றன. பழைய கூட்டுக்கள் உடைந்து செல்கின்றன. புதியவை இன்னமும் உருவாகிக் கொண்டுள்ளன. உலக ஆளுமைக்கான சக்திவாய்ந்த ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கான போராட்டம் ஒரு பயங்கரப் பதட்டத்தில் இருந்து அனைத்துலக விவகாரங்களுக்குச் செல்கின்றது. அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் இடையேயான யுத்தத்தின் சாத்தியங்கள் ஏற்கனவே உலகப் பத்திரிகைகளின் பக்கங்களில்

படிப்பகம்

www.padippakam.com

கலந்துரையாடப்பட்டு வருகின்றது. அமெரிக்க அரசியல்வாதிகளின் தேசியவெறி தொனிக்கும் பேச்சுக்கள் அதிகரித்துள்ளதன் நோக்கம், யப்பான் தனது பிரமாண்டமான பொருளாதார பலத்தினையும், அமைப்புத் திறமைகளையும் கொண்டும் அமெரிக்காவை எதிர்த்து நிற்கக் கூடிய ஒரு இராணுவ சக்தியைச் சிருஷ்டிப்பதற்கு முன்னதாக தாக்குவதற்குச் சாதகமான ஒரு பொதுஜன அபிப்பராயத்தினைத் தயார் செய்வதே. ஆனால் இன்றைய சமயத்தில் இது எவ்வளவுதான் சாத்தியமாகத் தோன்றினும் பொருளாதார நலன்களின் மோதுதல்கள் முதலில் அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் இடையேயான ஒரு இராணுவ மோதுதலுக்கே இட்டுச் செல்லும் என முன்னோடியாகவே கூறிவிட முடியாது. அமெரிக்காவுக்கும் பிரித்தானிய உட்பட்ட பல ஐரோப்பிய சக்திகளுக்கும் இடையேயான ஒரு யுத்தமும் கூடச் சாத்தியமானதே. மேலும் ஒரு எதிர்கால யுத்தம் ஐரோப்பிய அரசுகளைத் தம்மிடையே பிளவுண்டு, வேறுபட்ட தடை முகாம்களில் நிற்கவும் செய்யும் என்ற சாத்தியத்தினையும் நீக்கிவிட முடியாது. ஜேர்மனியின் இணைப்பு, ஐரோப்பியக் கண்டத்தில் பழைய சமபல நிலையை அடியோடு மாற்றிவிட்டது. 'நண்பர்களதும்' 'எதிரிகளதும்' கூட்டுக்கள் இன்னமும் எதிர்பாராத உருவம் எடுக்கவுள்ளது. ஆனால் ஏகாதிபத்தியத்தின் நலன்களின் மோதுதல் தவிர்க்க முடியாத விதத்தில் ஒரு யுத்தத்துக்கு இட்டுச் செல்கின்றது. இன்றுள்ள தொழில் நுட்பங்களின் விளைவுகள் பயங்கரமாக இருக்குமாதலால் ஏகாதிபத்தியவாதிகள் அத்தகைய தீவிரமான பெறுபேறுகளைத் தவிர்த்துக் கொள்வார்கள் என எண்ணுவது ஆபத்தான அரசியல் தவறாகும். பேரழிவு பற்றிய பயம் அனைத்துலக உறவுகளின் நடத்தையில் சில செல்வாக்கைச் செலுத்துகின்றது என்பது உண்மைதான். உலக ஏகாதிபத்தியத்தின் தலைவர்கள் புத்திசுவாதீனமான வேளையில் மூன்றாம் உலக யுத்தம், மனித நாகரீகத்துக்குச் சமாதி கட்டுவதாகும் என்பதை உண்மையில் உணரவே செய்வார்கள். ஆனால் வரலாற்று அனுபவம், முதலாளித்துவ அரசியல்வாதிகளின் அகநிலைப்பயமோ அல்லது ஒழுக்கவியல் மனச்சாட்சியோ அன்றி ஏகாதிபத்தியத்தின் புறநிலை முரண்பாடுகளே பிரச்சினைகளைத் தீர்மானம் செய்கின்றன என்பதை நிரூபிக்கின்றது. மற்றுமோர் உலக யுத்தத்தினைத் தடுக்கக் கூடிய உலகில் உள்ள ஒரே சக்தி புரட்சிகரத் தொழிலாள வர்க்கமே.

## கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சி

26. இறுதி ஆய்வுகளின் படி ஏகாதிபத்திய சமபல நிலையின் சரிவுக்குக் காரணமாக உள்ள அதே அடிப்படை முரண்பாடுகளே –

படிப்பகம்

www.padippakam.com



உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசு முறைக்கும் இடையேயான முரண்பாடுகளே - சகல ஸ்டாலினிச ஆட்சிகளின் வெடிப்புச் சரிவுகளுக்கும் காரணமாகும். 'கொன்கிரீட்' மதிற்சுவர்களோ அல்லது அரசினால் திணிக்கப்பட்ட ஊடுருவ முடியாத வர்த்தகத் தடைகளோ உலக சந்தையின் அளுத்தங்களுக்கு எதிராக கிழக்கு ஐரோப்பிய பொருளாதாரங்களுக்கு தடுப்பு ஊசி ஏற்ற முடியவில்லை. ஸ்டாலினிச ஆட்சிகளின் சரிவுக்கான பொறுப்பினை மார்க்சிசத்தின் மேல் திணித்துவிடும் முயற்சிகள், பொருளாதார ரீதியில் பின்தங்கிய தேசிய அரசுகளில் ஸ்டாலினிசம் சோசலிசத்தைக் கட்டி எழுப்புவதாக குறிப்பிட்ட முன்னைய கோரிக்கைகளைப் போன்றே மோசடியானவை. புரட்சிகர வேலைத்திட்டத்தினை அமுல் செய்வதைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு மாறாக உலகச் சந்தையில் இருந்தும், உழைப்பின் அனைத்துலகப் பகுப்பில் இருந்தும் கிழக்கு ஐரோப்பிய அரசுகளைச் செயற்கையாகத் தனிமைப்படுத்துவதானது பின்தங்கிய தேசியப் பொருளாதாரங்களுக்கும் உலக ஏகாதிபத்தியத்துக்கும் இடையே விநோதமான விதிமுறைகளை நிலைநாட்டும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கையாலாகாத்தனமான முயற்சியைப் பிரதிநிதித்துவம் செய்தது. ஸ்டாலினிச போக்கிரிகளின் கவனத்தை ஈர்க்கும் வாக்குத்திறனை ஊடறுத்து, அவர்களின் தேசியப் பொருளாதார வேலைத்திட்டத்தினை ஆராயின் அவர்கள், நிச சோசலிச நிர்மாணத்துக்கு உலகப் பொருளாதார அபிவிருத்தியை ஆரம்பப் புள்ளியாகக் கொள்ளும் மார்க்சிசத்துக்கு முற்றிலும் எதிரானவர்கள் என்பதைக் காட்டும். கிழக்கு ஐரோப்பிய ஆட்சிகளின் சரிவும், சோவியத் ருஷ்யாவில் ஸ்டாலினிச ஆட்சியின் வெடிப்பும் 1924ல் இருந்து ட்ரொட்ஸ்கிச இயக்கம் பிற்போக்கு மார்க்சிச விரோத வேலைத் திட்டமான 'தனிநாட்டில் சோசலிசத்துக்கு' எதிராகத் தொடுத்து வந்த சளைக்காத போர்ராட்டத்தினை உறுதியான முறையில் நிரூபித்துள்ளது.

27. கிழக்கு ஐரோப்பிய, சோவியத் ருஷ்யச் சம்பவங்கள் உலக முதலாளித்துவத்தின் சபமலமின்மையை உக்கிர மாக்கியுள்ளன. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிச ஆட்சிகள் சரிந்ததைத் தொடர்ந்து, அனைத்துலக முதலாளித்துவம் மகிழ்ச்சி கண்டது. முதலாளித்துவம் தான் ஒரு பிரமாண்டமான வெற்றி கண்டுள்ளதாக நம்பியது. பொதுசுபீட்ச மநோநிலையால் தூண்டப்பட்ட ஒரு கல்விமான் 'வரலாற்றின் முடிவு வந்து விட்டது' எனப் பிரகடனம் செய்தார்: முதலாளித்துவ ஜனநாயகத்தின் வெற்றியை கற்பனை செய்வதைத் தவிர மனித இனத்துக்கு எதுவும் எஞ்சியில்லை. இன்று மிகவும் அவதானமுள்ள குரல்கள் கேட்கத் தொடங்கியுள்ளன. ஸ்டாலினிச ஆட்சிகள் விட்டுச் சென்றுள்ள அரசியல், பொருளாதார அழிபாடுகளை

அவர்கள் ஆய்வு செய்கையில் முதலாளி வர்க்கத்தில் உள்ள சிந்தனை மிகுந்த போக்குக்கள் கிழக்கு ஐரோப்பா ஸ்டாலினிச ஆதிக்கத்தின் கீழ் உலக முதலாளித்துவத்தின் புனருத்தாரணத்துக்கு அது செய்துள்ள தீர்க்கமான பங்களிப்பினை நினைவு கூரத் தொடங்கியுள்ளனர். ஓட்டோமன், ஹப்ஸ்பேர்க் பேரரசுகளின் சரிவின் பின்னர் நீண்டகாலமாக அடக்கப்பட்டதும், தீர்வு காணப்படாததுமான தேசிய இன மோதுதல்கள் கிழக்கு ஐரோப்பாவையும் பால்கனையும் பற்றிப் படர்ந்துள்ளன. இவை அனைத்துலக அரசியல் சூழலில் பழைய, இன்னமும் நச்சுத்தன்மை கொண்ட விஷத்தினைக் கக்கிக் கொண்டுள்ளன.

28. பால்கன் பிராந்தியத்தில் இருந்து கிடைக்கும் சமகாலச் செய்திகள் - 1930ல் அல்லது 1910ல் எழுதப்பட்டவை போன்று இருக்கின்றன. அனைத்துலகப் பத்திரிகைகள் கொசோவோவின் தலைவிதியையிட்டும் சேர்ப்ஸ், குரோட்ஸ் சுலோவின்ஸ், பொஸ்னியன் முஸ்லீம்களுக்கு இடையேயான போர்களைப் பற்றியும் மஸ்டோனியரின் தேசிய அடையாளம் பற்றிய வரைவிலக்கணம் தொடர்பான தகராறுகள் பற்றிய அறிக்கைகளால் நிரம்பி வழிகின்றன. எல்லைத் தகராறுகள், தேசிய அரசுகளின் தேசிய இனக் கலப்பு பற்றிய மோதுதல்கள் ஒவ்வொன்றும் அனைத்துலகப் பிரிவுகளுடன் வெடித்துச் சிதறும் அரசியல் எதிர் விளைவுகளை இயக்கும் சாத்தியங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளன. 'செக்ஸ்'சுகளுக்கும் 'சொலவாக்ஸ்'களுக்கும் இடையேயான தகராறுகளை ஜேர்மனி, ஹங்கேரி, போலந்து, அத்தோடு உக்ரேனியன் தேசியப் பிரச்சினைகளில் இருந்து பிரித்துவிட முடியாது. ஹங்கேரியிலும் ரூமேனியாவிலும் தேசிய சிறுபான்மையினர்களின் அதிருப்தியானது அவ்விரு நாடுகளுக்கும் இடையேயான யுத்தமாக வெடிக்க அச்சுறுத்திக் கொண்டுள்ளது. யூகோசலவாக்கியாவின் உள்ளான வெடித்துச் சிதறும் தகராறுகள் இன்றைய அல்பேனியா, ரூமேனியா, கிரீஸ் எல்லைகளின் நின்று பிடிக்கும் தன்மையைப் பிரச்சினைக் குள்ளாக்கியுள்ளன. கிழக்கு ஐரோப்பாவினதும் அத்தோடு சோவியத் ரூஷ்யாவினதும் தேசிய, இனத் தகராறுகள் பெரும் ஏகாதிபத்தியச் சக்திகளின் சதிகளில் தவிர்க்க முடியாத வகையில் சிக்கவைக்கும் உள்ளூர் போட்டிகள், பல்வேறு தேசியக் குழுக்களின் ஆரம்ப எதிர்பார்ப்புக்களைப் பொருட்படுத்தாமல் அப்பிராந்தியத்தில் ஏகாதிபத்தியவாதிகள் தமது சொந்த ஊடுருவலை விஸ்தரிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

29. கிழக்கு ஐரோப்பிய நெருக்கடியானது, தேசிய அரசு முறையினதும் தேசிய சுயநிர்ணயத்துடன் தொடர்புபட்ட பிரச்சினைகளதும் அனைத்துலக நெருக்கடியை தெளிவான முறையில் எடுத்துக் காட்டியுள்ளது. முதலாளித்துவத்தின் கீழ் இவற்றுக்கு நிச ஜனநாயகத்

www.padippakam.com



தீர்வினைக் கண்டு கொள்ள முடியாது. முற்றிலும் பல்லின ஜனத்தொகையினரை உள்ளடக்கி வைக்க தேசிய எல்லைகளைத் திரும்பி வரையும் எண்ணமானது ஒரு மோசடியான பிற்போக்குக் கோமாளித்தனமாகும். ஆனால் முதலாளித்துவம், செல்வம், வளங்களின் அநீதியான பங்கீடு பற்றிய மக்களின் கவனத்தைத் திசை திருப்ப, அவர்களை தேசிய, இன தகராறுகள் போன்ற முட்டுச் சந்தினுள் தள்ளிவிடுகின்றது. தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்தினைத் தடுக்கவும், வர்க்கப் போராட்டம் பலமாக வெடிப்பதைத் தடுக்கவும், ஆளும் வர்க்கங்கள், ஏதோ ஒரு வகையான இனவாதத்தின் வீரர்களாக சேவையாற்ற ஆர்வம் காட்டும் குட்டி முதலாளித்துவ வாய்வீச்சுக்காரர்களைச் சேவையில் அமர்த்துகின்றது. அத்தகைய பிரச்சாரத்தின் வெற்றி, தேசியவாதத்தின் புத்திஜீவி, ஒழுக்கநெறிப் பலத்தின் அடிப்படையில் அன்றி, முதலாளித்துவ முறையின் நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கான வழியைக் காட்டாத தொழிலாள வர்க்கத்தின் பாரம்பரிய இயக்கங்களின் அடிபணிவினால் உண்டான அரசியல் இடைவெளியைச் சார்ந்ததாகும்.

30. நான்காம் அகிலம், தேசிய சுயநிர்ணயத்துக்கான கோரிக்கை எங்கெல்லாம் ஏகாதிபத்திய மேலாதிக்கத்தைத் தூக்கி வீசவோ அல்லது எந்தவொரு தேசிய, இனக் குழுவின் ஜனநாயக உரிமைகள் ஒடுக்கப்படுவதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவோ முற்றிலும் நியாயமானதும், முற்போக்கு விருப்பத்தினை வெளிக்காட்டுகிறதோ அங்கெல்லாம் அதற்கு உறுதியாகவும், உரமாகவும் ஆதரவளிக்கின்றது. ஆனால் நான்காம் அகிலம், உலக சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தில் சகல தேசிய இனங்களதும் தொழிலாளி வர்க்கத்தினை ஐக்கியப்படுத்துவதன் மூலம் தனது ஜனநாயக வேலைத் திட்டத்தின் இந்த முக்கிய அம்சத்தினை யதார்த்தமாக்கப் பிரேரிக்கின்றது. இது தொழிலாளி வர்க்கம், முதலாளித்துவ தேசியவாதத்தின் பிற்போக்கு வாய்வீச்சுக்காரர்களைத் தூரே தள்ளுவதையும், சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தினை அனைத்துலக வர்க்க ஐக்கியத்தின் உலகளாவிய செய்தியுடன் முன்னெடுப்பதையும் குறிக்கிறது. இந்த வழியில் மட்டுமே தேசிய சுயநிர்ணயம், மனித இனத்தின் பொருளாதார, கலாச்சார அபிவிருத்தியில் சகல மக்களையும் சமாதானமான முறையில் ஐக்கியப்படுத்தும் ஒரு கருவியாக முடியும். 57 ஆண்டுகளுக்கு முன்னர் லியொன் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டது போல்: 'தேசியப் பிரச்சினை எங்கும் சமூகப் பிரச்சினையுடன் இணைந்து கொள்கிறது. உலகத் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலம் மட்டுமே எமது பூகோளத்தின் சகல தேசிய இனங்களதும் நிசமானதும், உறுதியானதுமான அபிவிருத்திச் சுதந்திரத்தினை உத்தரவாதம் செய்ய முடியும்.'

www.padippakam.com


## பின்தங்கிய நாடுகளின் தொழிலாளர்களும் காலனித்துவத்துக்கு எதிரான போராட்டமும்

31. லிபரல் சீர்திருத்தவாதிகளையும் போலி சோசலிச சந்தர்ப்பவாதிகளையும் பொறுத்த மட்டில் யுத்தத்தின் பின்னர் ஐரோப்பிய சக்திகள் தமது பழைய காலனித்துவ நிலைப்பாட்டில் இருந்து பின்னடித்தமையும் காலனிகளுக்கு அரசியல் சுதந்திரம் வழங்கியமையும் முதலாளித்துவத்தின் தன்மையில் ஒரு சார்பான்தும் அடிப்படையானதுமான மாற்றத்தினைப் பிரதிநிதித்துவம் செய்தது. இது பொருளாதார ரீதியில் முன்னேறிய நாடுகளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையில் பெரிதும் மனிதாபிமான, ஜனநாயக உறவுகளுக்குச் சார்பாக செல்வாக்கிழந்ததும், காலவதியானதுமான அரசியல் ஆளுமை முறையைக் கைவிடுவதைக் குறிப்பதாகும் என்றனர். இந்தச் சுவையற்றதும், அர்த்தமற்றதுமான வாதம் நீண்ட காலத்துக்கு முன்பே நிரூபிக்க முடியாத ஒன்றென லெனினால் அம்பலமாக்கப்பட்டது. இதன்படி ஏகாதிபத்தியம் வெறுமனே ஒரு கொள்கையேயன்றி திட்டவட்டமான பொருளாதாரத் தோற்றப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவ அபிவிருத்தியின் ஒரு குறிக்கப்பட்ட கட்டம் அன்று. காலனிகளுக்குப் பெயரளவிலான சுதந்திரத்தினை வழங்கியமையானது ஏகாதிபத்தியத்தின் தன்மையில் ஒரு மாற்றத்தினையன்றி, இந்த ஒடுக்கப்பட்ட நாடுகளில் நிதி மூலதனம் தனது ஆளுமையைப் பிரயோகித்த அரசியல் வடிவங்களில் ஏற்பட்ட மாற்றத்தினை மட்டுமே பிரதிநிதித்துவம் செய்தது. ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, ஆசியாவினை ஊடறுத்துச் சென்ற இந்த காலனித்துவத்துக்கு எதிரான வெகுஜன இயக்கத்தின் எதிரே ஏகாதிபத்தியவாதிகள் காலனித்துவ முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளுடன் ஒரு அரசியல் சமரசத்தினைத் தயார் செய்யத் தீர்மானித்தனர். ஏகாதிபத்தியத்தின் அத்தியாவசியமான பொருளாதார நலன்களைப் பேணிக் காத்த தேசிய முதலாளி வர்க்கத்துக்கு 'ஒழுங்கான அதிகார மாற்றம்', தொழிலாள வர்க்கத்துக்கு அதிகார மாற்றத்தில் போய் முடியும் கட்டுப்படுத்த முடியாத புரட்சிகர எழுச்சியைவிட விரும்பத்தக்கதாக விளங்கியது. எனவே, இந்தக் 'காற்று மாற்றத்துக்கு' அவசியமான விதத்தில் ஒத்துப்போனமையானது ஒரு புதிய ஏகாதிபத்திய சமபலம் அடிப்படையாகக் கொண்டிருந்த யுத்தத்தின் பின்னைய ஒரு முக்கிய உபாய அங்கமாக விளங்கியது.

32. பெயரளவிலான சுதந்திரம், பரந்தளவிலான தொழிலாளர், விவசாயிகளுக்கு அவர்களின் சமூக நிலைமைகளில் நிரந்தரமான முன்னேற்றத்தினைக் கொணரவில்லை. தேசிய முதலாளி வர்க்கம்,

www.padippakam.com



தமது நாடுகளை ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரப் பிடியில் இருந்து விடுதலை செய்யவோ அல்லது ஜனநாயகப் புரட்சிகளுடன் வரலாற்று ரீதியில் இணைந்த எந்தவொரு அடிப்படைப் பணிகளைப் பூர்த்தி செய்யவோ இலாயக்கற்றது என்பதை நிரூபித்தது. எவ்வாறெனினும் தேசிய முதலாளி வர்க்கம், குளிர் யுத்தத்தின் மோதுதல்களால் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி வெகுஜனங்களிடையே ஏதோ ஒருவிதத்தில் நம்பிக்கையைப் பேணும் பொருட்டு அதனது 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' நற்சான்றிதழ்களைப் பற்றிப் பிதற்றிக் கொண்டது. சோவியத் அதிகாரத்துவத்தின் ஆதரவினை விதைப்பதன் மூலம் தேசிய முதலாளி வர்க்கம் – சிறப்பாக மத்திய கிழக்கில் – அதில்லாமல் ஏகாதிபத்தியத் திடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதைக் காட்டிலும் அதிக உதவியைக் கறந்து கொள்ள முடிந்தது. வியட்னாமில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தைத் தொடர்ந்து அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் ஆளும் வட்டாரங்களில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, தேசிய முதலாளி வர்க்கத்துக்கு மூச்சுவிட மேலதிக வாய்ப்பினை வழங்கியது. எவ்வாறெனினும் இந்நிலைமையானது விசித்திரமானதும் இயற்கையாகவே ஈடாட்டம் கண்ட அனைத்துலகக் கூட்டினையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததால் நின்று பிடிக்க முடியவில்லை. ஸ்டாலினிச, சமூக ஜனநாயக அதிகாரத்துவங்களின் முடிவற்ற காட்டிக் கொடுப்புக்களின் தாக்கமானது அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தினை பெருமளவில் பலவீனமடையச் செய்தது. இவை ஏகாதிபத்தியம் ஒடுக்கப்பட்ட நாடுகள் மேலான அரசியல் அழுத்தத்தினை உக்கிரமாக்குவதற்கான வாய்ப்பினை வழங்கியது. வியட்னாம் தோல்வியின் படிப்பினைகள் ஏகாதிபத்தியவாதிகளின் சகல இராணுவக் கல்வி நிறுவனங்களிலும் கவனமாக ஆராயப்பட்டன. மல்வினாஸ் தொடர்பாக ஆர்ஜன்ரைனாவுக்கு எதிரான பிரித்தானிய யுத்தம் (1982), லெபனான் மீதான இஸ்ரேல் ஆக்கிரமிப்பும், பேரூட்டில் இருந்து பீ.எல்.ஓ. வெளியேற்றப்பட்டமையும் (1982), 1983ல் இருந்து அமெரிக்கா ஈடுபட்ட ஒரு தொகை இராணுவ நடவடிக்கைகள் – லெபனானிலான தலையீடு, கிரேனடா ஆக்கிரமிப்பு, லிபியா மீதான குண்டுவீச்சு, பனாமாவிலான ஆக்கிரமிப்பு இறுதியாக ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பு – எல்லாம் மொத்தத்தில் ஒடுக்கப்படும் நாடுகளில் தனது நலன்களைக் காக்கப் பாரம்பரிய விதிமுறைகளிற்கு ஏகாதிபத்தியம் திரும்புவதாகும். சோவியத் அதிகாரத்துவம் தனது நீண்டகால வாடிக்கையாளர்களை ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும், ஆசியாவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் குறைகாணும் முறையில் கைகழுவி விட்டமையானது, ஏகாதிபத்தியம் சம்பந்தமான கட்டுப்பாடுகள் சமரசங்களுக்கான சகல காரணங்களையும் அகற்றிவிட்டது என்பதில் பிரச்சினைக்கே இடமில்லை.

www.padippakam.com



33. அனைத்துலகச் சுற்றாடலில் இடம்பெறும் மாற்றத்தினை அங்கீகரித்து, தேசிய முதலாளி வர்க்கத் தலைவர்கள், தம்மைத் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க அனுமதிக்கும் ஏகாதிபத்தியத்திடம் இடம் தேடித் தவிக்கின்றார்கள். ஈராக்குக்கு எதிரான தாக்குதலில் அராபிய ஆட்சியாளர்களின் பங்குபற்றுதல், தேசிய முதலாளி வர்க்கம் அரைக் காலனித்துவ அடிபணிவு அந்தஸ்துக்கு ஏற்கனவே இணங்கிக் கொண்டு விட்டதைக் காட்டுகின்றது. 'சுதந்திர' எகிப்தின் ஜனாதிபதி ஹொஸ்னி முபாராக்கை விட அமெரிக்காவில் பிறந்த காலனித்துவ நிர்வாகி ஒருவர் அதிக விஸ்வாசத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்ய முடியாது. தேசிய முதலாளி வர்க்கத்தின் அரசியல் கெஞ்சலானது அரைகுறையான ஒரு இராணுவத் தாக்குதல் பற்றிய அச்சத்தினால் தூண்டப்பட்டதாகும். ஏகாதிபத்திய முதலீட்டின் மீது சார்ந்துள்ள ஒடுக்கப்படும் நாடுகளின் பொருளாதார சார்பின் ஒரு வெளிப்பாடாகும். இந்தியாவின் நேரு, இந்தோனேசியாவின் சுகர்ணோ, கானாவின் நிக்ரூமா, எகிப்தின் நாஸர் போன்ற முதலாளித்துவத் தேசியவாதிகளால் சுதந்திரத்தின் ஆரம்ப காலங்களில் தொடுக்கப்பட்ட தேசிய சுயபூர்த்தி வேலைத்திட்ட நடிப்புக்கள் நீண்ட காலத்துக்கு முன்பே வங்குரோத்தில் போய் முடிந்தன. தமது நாடுகளை அனைத்துலக நிதி மூலதனத்தின் பிடியில் இருந்து விடுதலை செய்ய முயற்சிப்பதற்கு மாறாக, தேசிய முதலாளி வர்க்கம் 'சிறப்புத் தொழில் வலயங்கள்' ஸ்தாபிதத்துக்காக இரந்து கொண்டுள்ளார்கள். இவற்றில் ஏகாதிபத்தியவாதிகள் பிராந்தியத்தின் இயற்கை, மனித வளங்களை தடையின்றிச் சுரண்ட அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

34. ஒடுக்கப்படும் நாடுகள் அனைத்திலும் ஒரே கதைதான். லத்தீன் அமெரிக்காவில் பழம் முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் - மெக்சிக்கோவில் PRIயும் பேருவில் APRAயும் ஆர்ஜன்ரைனாவில் பேரொனிசமும் (Peronism) வோல் ஸ்ரீட் வங்கிகளுக்கு மூலதனத்தினை ஏற்றுமதி செய்யும் பொருட்டு மக்களைப் பட்டினி போடும் சர்வதேச நாணய நிதியத்தின் நேரடி ஏஜன்டுகளாகத் தோன்றின. பேரொனிசத்தைப் பொறுத்த மட்டில் இதன் ஸ்தாபகர் முதலாளித்துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையே ஓர் 'மூன்றாம் வழியை' கண்டு பிடித்து விட்டதாகக் கூறிக் கொண்டவர். இவரின் இன்றைய பிரதிநிதியான ஜனாதிபதி கார்லோஸ் மெனாம், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெரிதும் சாதகமான கவனத்தினை ஈர்க்கவோ அல்லது வங்குரோத்து ஆர்ஜன்ரைனா மூலதனத்துக்கு ஒரு சில குவைத் கொந்தராத்துக்களை வெற்றி கொள்ளும் பொருட்டோ பாரசீக வளைகுடாவுக்கு யுத்தக் கப்பல்களை அனுப்பி வைத்தார்.

www.padippakam.com



35. இடது முதலாளித்துவ தேசியவாதிகளிடையே தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் வக்கீல்களான பாலஸ்தீன விடுதலை இயக்கம், நிகரகுவா சன்டினிஸ்டாஸ், இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் போன்றவை ஒவ்வொன்றும் கடந்த காலப் பகுதியில் அடிபணிவுக்கு ஒரே பாதையையே பின்பற்றின. இவை அனைத்தும் மிகவும் அடிப்படையான பணியாணி தேசிய சுயநிர்ணயம், ஏகாதிபத்தியத்திலிரிந்து விடுதலையைக் கைகழுவி விட்டுவிட்டு, ஏகாதிபத்தியத்தினால் திணிக்கப்பட்ட தேசியப் பிரிவுகளையும் வாஷிங்டனில் ஆரம்பமான ஏதோவொரு 'சமாதான' திட்டத்தினையும் அரவணைத்துக் கொண்டன. முதலாளித்துவ தேசியவாதத்தின் மற்றோர் உருவமாக அம்பலமாக்கப்பட்ட கியூபன் ஆட்சியாளரான பிடெல் காஸ்ட்ரோவும் இவர்களுடன் சேர்ந்து கொண்டார். வளைகுடா யுத்தத்துக்கான தயாரிப்புக்களின் போது காஸ்ட்ரோவின் பிரதிநிதி, அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தினை சட்டரீதியாக்கும் விதத்தில் முக்கிய பிரேரணைகள் மீதான வாக்கெடுப்புக்களில் அடிக்கடி கலந்து கொள்ளாது நழுவினார். சோவியத் ஆதரவாளர்களின் ஆதரவினை இழந்ததைத் தொடர்ந்து, காஸ்ட்ரோ ஆட்சி தனது தேசிய சோசலிச நடிப்புக்கள் நின்றுபிடிக்காது என்பதைக் கண்டு வருவதோடு. கியூபாவை மீண்டும் ஏகாதிபத்திய உலகச் சந்தையுடன் இணைத்துக் கொள்ள வேகமாக நகர்ந்து கொண்டுள்ளது.

36. தொழிலாள வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கத்தின் எந்தவொரு கன்னையினதும் ஆளுமைக்குட்பட்டிருக்கும் வரையில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் போராட்டம் வெற்றிகரமாக நடாத்தப்பட முடியாது. இந்த விதி, எகிப்திய தொழிலாளர்களுக்கு பிரயோகிக்கப்படுவதற்கு எந்தவிதத்திலும் குறையாத வகையில் ஈராக் தொழிலாளர்களுக்கும் பிரயோகமாகின்றது. ஒரு சதாம் ஹுசேனுக்கும், ஒரு ஹுஸ்னி முபாரக்குக்கும் இடையேயான வேறுபாடுகள் அடிப்படைக் கொள்கை சார்ந்த பண்பினை விட ஒரு உபாயப் பண்பினைக் கொண்டதாகும். ஏகாதிபத்தியத் தாக்குதலில் இருந்து ஈராக்கைப் பேண தொழிலாள வர்க்கம் கடமைப்பட்டுள்ள அதே வேளையில் அது ஹுசேன் ஆட்சிக்கு அணுவளவும் அரசியல் ஆதரவளிக்க முடியாது. ஹுசேன் குவைத்தினை ஆக்கிரமித்தது, ஏகாதிபத்தியத்துக்கு ஒரு தாக்குதல் தொடுக்க அன்று. ஏகாதிபத்தியத்துடனான ஈராக்கிய முதலாளி வர்க்கத்தின் பேரம்பேசும் சக்தியைப் பலப்படுத்தவே அங்ஙனம் செய்தது. அதே விதத்திலேயே ஹுசேன் யுத்தத்தினை நடாத்தினார். அதன் மூலம் தனது ஆட்சியின் அரசியல் முதன்மைகளை அம்பலப்படுத்தியது. அவரின் மிகவும் அனுபவம் வாய்ந்த படையினர் தொழிலாளர் வர்க்கத்துக்கும் தேசிய

www.padippakam.com



சிறுபான்மையினருக்கும் எதிராக ஈராக்குள் பயன்படுத்துவதற்காக பின்னணியிலும், ரிசேர்வ் படையிலும் வைக்கப்பட்டனர்.

37. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம், தொழிலாள வர்க்கத்தினால் அனைத்துலக புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நடாத்தப்பட வேண்டும். அந்த அல்லது இந்த நாட்டுக்குச் சார்பாக எல்லைகளை மாற்றுவதன் மூலம் வெகுஜனங்களின் சுதந்திரத்தினை அடைய முடியாது. ஆனால் தேசிய முதலாளி வர்க்கத்தினைத் தூக்கி வீசி, தேசிய அரசு முறையில் ஏகாதிபத்தியவாதிகளால் வரையப்பட்ட எல்லைகளை அழிக்க வேண்டும். அவை ஒடுக்கப்படும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கும் முற்றிலும் தடைக்கல்லாக உள்ளன. பொருளாதார ரீதியிலான எல்லை ஒட்டு வேலைகளுக்குப் பதிலாக நான்காம் அகிலம், அரைக்காலனித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தினை லத்தீன் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கு ஐக்கிய சோசலிச அரசுகளை அமைக்கப் போராடுமாறு வேண்டுகின்றது.

## சோவியத் அதிகாரத்துவத்தினை தூக்கி வீசுவதும் அக்டோபரின் தேட்டங்களைக் காப்பதும்.

38. பாரசீக வளைகுடாவில் சோவியத் அதிகாரத்துவம் வகித்த பாத்திரத்தின் கொலைகாரப் பரிமாணத்தினை அறிவிக்க 'துரோகம்', 'காட்டிக்கொடுப்பு' என்ற வார்த்தைகள் தவறிவிடுகின்றன. ஈராக்குக்கு எதிராக ஏகாதிபத்தியம் இழைத்த அட்டூழியங்களுக்கு கொர்பச்சேவ் அதிகாரத்துவம் முழுப் பொறுப்பாகும். ஐக்கிய நாடுகள் சபையில் இது முதலில் ஈராக்குக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் பின்னர் இராணுவ பலத்தைப் பயன்படுத்தவும் வாக்களித்தது. இவை ஏகாதிபத்தியம் தனது தாக்குதலைத் தயார் செய்வதற்கு அவசியப்பட்ட அரசியல் திரையை வழங்கின. ஈராக்குக்கு எதிரான ஏகாதிபத்திய யுத்தத்தில் கிரேம்ளின் கலந்து கொண்டமையானது ஸ்டாலினிசம் சோவியத் யூனியனிலும் அனைத்துலகிலும் அரைநூற்றாண்டுக்கு மேலாக வகித்த எதிர்ப்புரட்சிப் பாத்திரத்தின் வரலாற்று உச்சக் கட்டத்தினைக் காட்டுகின்றது.

39. கொர்பச்சேவ் ஆட்சி வெளிவெளியாக உலக ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்தமையானது, சோவியத் ரூஷ்யாவில் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யும் சோவியத் அதிகாரத்துவத்தின் முயற்சியின் தர்க்க ரீதியான விளைவாகும். கடந்த காலத்தில் தனது சொந்தச் சடச் சலுகைகளை அடிப்படையாகக் கொண்டிருந்த தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளைக் காக்க

www.padippakam.com



உணர்ந்த வேளையில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் அதை காக்கத் தள்ளப்பட்டது. அது சோவியத் யூனியனை ஏகாதிபத்திய ஆத்திரமூட்டல்களில் இருந்தும் நேரடி இராணுவத் தாக்குதல்களில் இருந்தும் பேணிக் காக்க முயன்றது. எவ்வாறெனினும் ஏகாதிபத்தியத்தினை எதிர்க்க கிரேம்ளின் கையாண்ட விதிமுறைகள், லெனின் கடைப்பிடித்த புரட்சிகர அனைத்துலகவாதத்துக்கு முற்றிலும் எதிரானவை. சோவியத் அதிகாரத்துவம், ரூஷ்யாவின் அரச எல்லைக்குள் தனது சடநலன்களைக் காப்பதையிட்டு மட்டுமே அக்கறை காட்டியது. ஏகாதிபத்தியத்துடன் உடன்பாட்டுக்கு வரும் பொருட்டு அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தினைக் காட்டிக்கொடுக்கவும் அது ஒரு போதும் தயங்கியது கிடையாது. ஸ்பானியப் புரட்சி வேண்டுமென்றே நாசமாக்கப்பட்டமையும், ஹிட்லருடனான ஆக்கிரமிப்பு தவிர்ப்பு உடன்படிக்கையும் கிரேக்க உள்நாட்டு யுத்தத்தின் போது கம்யூனிஸ்ட் கட்சி பிரிவினையைக் கைவிட்டமையும் ஏகாதிபத்தியத்துடனான தனது சொந்தப் பிற்போக்கு சந்தர்ப்பவாத உறவுகளுக்காக கிரேம்ளின் அனைத்துலக தொழிலாள வர்க்கப் போராட்டத்தினை அடிமைப்படுத்தியதற்கு மிகவும் அவமானம் மிகுந்த உதாரணங்களாகும். மூன்றாம் உலக நாடுகளுக்கு வரையறுக்கப்பட்ட இராணுவ, நிதி உதவிகளை இது வழங்கிய போதெல்லாம் அவற்றை சோவியத் ரூஷ்யாவில் இருந்து ஏகாதிபத்திய அழுத்தத்தினைத் தணிக்கவே செய்தது.

40. சோவியத் ரூஷ்யாவில் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யும் முயற்சி தொழிலாள வர்க்கத்திடமிருந்து பிரமாண்டமான எதிர்ப்பினைத் தோற்றுவிக்கும் என்பதை சோவியத் அதிகாரத்துவம் நன்கு அறியும். இதே காரணத்துக்காக, அது உலக ஏகாதிபத்தியத்துடன் மிகவும் நெருக்கமான கூட்டினை வேண்டி நிற்கிறது. எனவே. கிரேம்ளினின் வெளிநாட்டுக் கொள்கையின் மைய இலக்கு, சோவியத் ரூஷ்யாவின் மேல் ஏகாதிபத்திய அழுத்தத்தினை தணிப்பதை விட உக்கிரமாக்குவதே. எனவேதான் சோவியத் அதிகாரத்துவம் சோவியத் யூனியனின் தெற்கு எல்லையில் இருந்து பல நூறு மைல்களுக்கு அப்பால் இலட்சக்கணக்கான ஏகாதிபத்தியப் படைகளைக் குவிப்பதை வரவேற்றுள்ளது. அமெரிக்க முதலாளித்துவத்தின் முன்னணி வார சஞ்சிகையான 'ரைம்', தேசிய குடியரசுகளினுள் கடும் தேசிய இன மோதல்கள் இடம் பெறுமானால் சோவியத் யூனியனுள் அமெரிக்கா இராணுவ நடவடிக்கைக்குத் திட்டமிட்டு வருவது பற்றிய ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டது. கிரேம்ளின் இதுபற்றி ஒரு பகிரங்க எதிர்ப்பு அறிக்கையைத் தன்னும் வெளியிடவில்லை.

www.padippakam.com



41. கிரேம்ளினின் உடந்தையோடு ஏகாதிபத்தியம் சோவியத் ரூஷ்யாவின் பரந்தபிராந்தியத்தினை கட்டுப் பாட்டுக்குள் கொணரும் தனது உரிமையை அதிகரித்த உறுதியோடு வலியுறுத்தி வருகின்றது. சோவியத் யூனியனின் மூலப் பொருட்கள், பரந்தளவிலான உற்பத்தித் திறன், பிரமாண்டமான சந்தை என்பவற்றின் பொருளாதார முக்கியத்துவத்தினை ஏகாதிபத்தியவாதிகள் புறக்கணித்துவிட முடியாது. உண்மையில், ஏகாதிபத்தியச் சக்திகளின் கணிப்புக்களிலும், போட்டிகளிலும் சோவியத் ரூஷ்யாவினதும் அத்தோடு கிழக்கு ஐரோப்பாவினதும் தலைவிதி ஏற்கனவே ஒரு முக்கிய இடத்தினைப் பிடித்துக் கொண்டுள்ளது. அதிகாரத்துவங்களின் உள்ளும், தேசிய குடியரசுகள் உள்ளேயுமான உள்ளார்ந்த மோதுதல்களில் ஏகாதிபத்தியவாதிகளின் போட்டி நலன்கள் வெளிவெளியாக உறுதிப்பட்டு வருகின்றன. ஜேர்மனியர்கள் கொர்பச்சேவ் ஊடாகச் செயற்பட்டு, கிரேம்ளினில் அதிக செல்வாக்கை ஈட்டிக் கொண்டதைக் கண்டு பயந்த அமெரிக்கா, யெல்ட்சினதும் ரூஷ்யக் குடியரசுகளதும் செயலின் பரிந்துரையாளனாகத் தொடங்கியுள்ளது.

42. ஏகாதிபத்தியம், சோவியத் ரூஷ்யாவைத் துண்டாடவும் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யவும் தேசியக் குடியரசுகளை அப்பட்டமாகப் பயன்படுத்துகின்றது என்ற உண்மை, தேசியக் குழுக்களின் சுயநிர்ணயத்துக்கான உரிமையைச் செல்லுபடியற்றதாக்கிவிடாது. சோவியத், அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு அதிகாரத்துவத்தின் பொலிஸ் அரசு ஆட்சியின் அடிப்படையில் சோவியத் ரூஷ்யாவின் (U.S.S.R.) 'பிராந்திய ஒருமைப்பாட்டை' காப்பதன் மூலமும் தேசிய உணர்வுகளை கர்வத்துடன் ஒடுக்குவதன் மூலமும் சேவை செய்ய முடியாது. ஆனால் சுயநிர்ணயம், ஏகாதிபத்தியத்தின் ஆட்சிக்குட்பட்ட முதலாளித்துவத்தின் புனருத்தாரணத்துக்கும் சோவியத் ரூஷ்யாவை மலட்டு அரச துண்டுகளாகப் பிரிவினை செய்வதற்குமான ஒரு பெரும் மூடுதிரையாக இல்லாதிருக்க வேண்டின், இப்போராட்டம் ஒரு அனைத்துலக சோசலிச, தொழிலாள வர்க்க வேலைத் திட்டத்தின் அடிப்படையில், தொழிலாள வர்க்கத் தலைமையில் நடாத்தப்பட வேண்டும்.

43. சோவியத் யூனியனின் உள்ளோ அல்லது அதன் துண்டிப்புக்களில் இருந்து எஞ்சிய பால்க்கன் துண்டு துணுக்குகளிலோ முதலாளித்துவம் புனருத்தாரணம் செய்யப்படுவதானது ரூஷ்யன், உக்ரேனியன், ஜோர்ஜியன் மற்றும் சோவியத் ரூஷ்யாவுள் இன்று அடங்கியுள்ள சகல தேசிய இனங்களதும் வரலாற்றில் ஒரு துக்ககரமான அத்தியாயத்தின் தொடக்கத்தினைக் குறிக்கும். போலந்தினதும் கிழக்கு ஜேர்மனியினதும் தலைவிதி ஏற்கனவே பிரத்தியட்சமாக்கியுள்ளது

www.padippakam.com



போல், 'சந்தைப் பொருளாதாரத்தின்' விளைவுகள் சோவியத் மக்களின் சமூக, கலாச்சார மட்டத்தில் ஒரு பயங்கர வீழ்ச்சியாக விளங்கும். எவ்வாறெனினும் சோவியத் அதிகாரத்துவத்தின் புனருத்தாரணக் கொள்கைகளுக்கும் பணவெறி கொண்ட 'கொம்பிரதோர்' முதலாளிகளின் வர்க்கத் தோற்றத்துக்குமான பதிலீட்டை இன்றைய பேரழிவுகளுக்குக் களம் அமைத்த 'தேசிய சோசலிசக்' கொள்கைகளைப் புதுப்பிப்பதன் மூலம் அடைந்துவிட முடியாது. 1917 அக்டோபர் புரட்சியின் அடிப்படைத் தேட்டங்களைப் பேணுவதும் அவற்றிற்கு சோசலிசப் பாதையில் புத்துயிரூட்டுவதும் போல்ஷிவிக் கட்சியின் மகத்தான வருடங்களில் அதன் ப்ணியை வழிநடாத்த லெனினும் ட்ரொட்ஸ்கியும் கடைப்பிடித்த உலகப் புரட்சிகர வேலைத் திட்டத்திற்குப் புத்துயிரூட்டுவதில் தங்கியுள்ளது.

44. சோவியத் யூனியனின் தலைவிதி இன்னமும் தீர்மானிக்கப்பட்டு விடவில்லை. உலகில் உள்ள வர்க்க நனவு கொண்ட ஒவ்வொரு தொழிலாளியினதும் பெரிதும் அக்கறைக்குரிய விடயமாக அதன் எதிர்கால்ம் விளங்குகின்றது. சோவியத் ரூஷ்யாவில் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்வதும் அதனை ஒரு அரைக்காலனி மட்டத்துக்கு இறக்குவதும், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு பயங்கரத் தோல்வியைப் பிரதிநிதித்துவம் செய்யும். அதிகாரத்துவத்தின் புனருத்தாரணக் கொள்கைகளுக்கு எதிரான சோவியத் தொழிலாள வர்க்கத்தின் போராட்டமும், ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துக்கு எதிரான அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் போராட்டமும் – ஒரே உலகப் போராட்டத்தின் இணைந்த பாகங்களாகும். அவற்றின் அத்தியாவசியமான ஐக்கியமானது, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சோவியத் பகுதியின் அபிவிருத்தி ஊடாக நனவான முறையில் யதார்த்தமாக்கப்பட வேண்டும்.

## நான்காம் அகிலமும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டமும்

45. 50 ஆண்டுகளுக்கு முன்னர் – இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமான அன்றும், ஒரு ஸ்டாலினிச ஏஜன்டின் கையால் தாம் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரும், லியொன் ட்ரொட்ஸ்கி எழுதியதாவது: "நீண்டதொரு மரண ஓலத்தைத் தவிர முதலாளித்துவ உலகுக்கு வேறு மார்க்கமே கிடையாது. தசாப்தங்கள் இல்லாது போகினும் நீண்ட பல கால யுத்தம், எழுச்சிகள், குறுகிய யுத்த நிறுத்தம், புதிய யுத்தங்கள், புதிய எழுச்சிகளுக்குத் தயார் செய்வது அவசியம். ஒரு இளம் புரட்சிக் கட்சி,

www.padippakam.com


இந்த முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்டாக வேண்டும். அத்தகைய ஒரு கட்சி தன்னைப் பரீட்சித்துக் கொள்ளவும் அனுபவங்களைத் திரட்டவும் முதிர்ச்சியடையவும் வரலாறு அதற்குப் போதிய வாய்ப்புக்களையும் சாத்தியங்களையும் வழங்கும். முன்னணிப் படையினர் எவ்வளவுக்கு உருக்காகிறார்களோ அவ்வளவுக்கு இரத்தம் தோய்ந்த கலகங்களைக் குறுகிய தாக்கலாம். எமது பூகோளத்தின் அழிவுகளையும் குறைக்கலாம். ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் ஒரு புரட்சிக் கட்சி நிற்கும் வரையும் பெரும் வரலாற்றுப் பிரச்சினைகளை எவ்விதத்திலும் தீர்க்க முடியாது. அபிவிருத்தி வேகமும் கால இடைவெளியும் பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் இது பொது வரலாற்று முன்நோக்கினையோ அல்லது எமது கொள்கையின் திசையையோ மாற்றி விடாது. முடிவு மிகவும் தெளிவானது: பாட்டாளி வர்க்க முன்னணிப் படையை பத்து மடங்கு சக்தியுடன் கல்வியறிவூட்டி, அணிதிரட்டும் வேலையை நடைமுறைப்படுத்துவது அவசியம். நான்காம் அகிலத்தின் பணி இதில் தான் தங்கியுள்ளது என்பது தெளிவு." (ஏகாதிபத்திய யுத்தமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் பற்றிய நான்காம் அகில முன்நோக்கு - லியொன் ட்ரொட்ஸ்கியின் ஆக்கங்கள் - 1939-40)

46. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, உலகத் தொழிலாள வர்க்கத்தின் மிகவும் வர்க்க நனவு கொண்ட பிரதிநிதிகளை எதிர்வரும் நவம்பரில் பேர்ளினில் கூட்டவும், ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான அதன் தொழிலாளர் உலக மகாநாட்டில் பங்கு கொள்ளச் செய்யவும் கூட்டுவதன் மூலம் புரட்சிகரத் தலைமை நெருக்கடியைத் தீர்ப்பதில் ஒரு தீர்க்கமான பணியைத் தயார் செய்கின்றது. எமது இலக்கு, நான்காம் அகிலத்தின் முழு வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில், உலகத் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தினை உருவாக்கும் போராட்டம் அடிப்படையாகக் கொள்ள வேண்டிய கொள்கைகளை உறுதியாக நிலைநாட்டுவதேயாகும்.

47. அனைத்துலகத் தொழிலாளர் இயக்கம் அதன் மாபெரும் நெருக்கடியூடாகச் சென்று கொண்டுள்ளது. இதில் சார்ச்சைக்கு இடம் இல்லை. ஆனால் இந்த நெருக்கடியுள் நான்காம் அகிலத்தின் இன்றைய காரியாளர்களை லியொன் ட்ரொட்ஸ்கி எதிர்பார்த்த சோசலிசப் புரட்சியின் பரந்த உலகக் கட்சியினுள் பரிணாமம் செய்வதற்கு முன்னொரு போதும் இல்லாத வரலாற்று வாய்ப்பு உள்ளடங்கி உள்ளது. ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சி மார்க்சிசத்தின் தோல்வியையன்றி அதனை மாபெரும் விதத்தில் ஊர்ஜிதம் செய்துள்ளது. நான்காம் அகிலத்தின் ஸ்தாபகப் பத்திரத்தில் ட்ரொட்ஸ்கி தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்ட வரலாற்று விதிகள் அதிகாரத்துவக்

www.padippakam.com



க்ருவிகளை விடச் சக்தி வாய்ந்தவை என்பது நன்கு பலம் வாய்ந்த முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளன. 1930பதுகளில் இருந்து தொழிலாள வர்க்கம் அனுபவித்த சகல தோல்விகளுக்கும் முக்கிய காரணமாக விளங்கிய, அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் மேல் ஒரு காலத்தில் ஸ்டாலினிசம் கொண்டிருந்த செல்வாக்கு நிரந்தரமாகச் சிதறுண்டு போய்விட்டது.

48. ட்ரொட்ஸ்கிசத்துக்கும் (நிச மார்க்சிசம்) ஸ்டாலினிசத்துக்கும் இடையே பரிணாமம் செய்யப்பட்டுள்ள உறவானது சோவியத் யூனியனுள் மிகவும் சக்திவாய்ந்த வடிவம் எடுத்துள்ளது. அங்கு தொழிலாள வர்க்கம் அதிகாரத்துவத்தின் விலங்குகளை உடைத்து எறியும் அதே வேளையில் முதற் தடவையாகத் தனது புரட்சிகர மரபுகளின் உண்மையையும் கண்டு கொண்டுள்ளது. லியொன் ட்ரொட்ஸ்கியின் நூல்கள் இன்று சோவியத் யூனியன் பூராவும் ஆயிரக்கணக்கானோரால் வாசிக்கப்பட்டு வருகின்றன. மாஸ்கோ, லெனின்கிராட், கியூ, எல்வோ, கார்கோ முதலிய இடங்களில் இருந்து நிருபர்கள் அனைத்துலகக் குழு அலுவலகங்களுள் பெருக்கெடுத்து வருகின்றார்கள். முன்னர் ஸ்டாலினிச 'லேபர் காம்ப்' ஆக விளங்கி, ட்ரொட்ஸ்கியின் கனிஷ்ட மகன் உட்பட நான்காம் அகிலத்தின் ஆதரவாளர்கள் கொலை செய்யப்பட்ட தூர வொர்குட்டாவில் கூட சோவியத் சுரங்கத் தொழிலாளர்கள் அனைத்துலகக் குழுவின் பத்திரங்களை விநியோகித்தும், படித்தும் வருகிறார்கள்.

49. சமூக ஜனநாயக, சீர்திருத்தவாத அமைப்புக்களின் அரசியல் ஆளுமையின் வீழ்ச்சி அதிகம் கட்புலனாகாவிடினும் அவை எந்த விதத்திலும் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்தவை அன்று. எந்தவொரு முக்கிய அரசியல் விவகாரத்திலும் சமூக ஜனநாயகக் கட்சிகளுக்கும் 'மத்திய வலதுசாரி' கட்சிகளுக்கும் இடையே இனங்காணக் கூடிய வேறுபாடு இல்லாத முறையில் இந்த அமைப்புக்கள் முதலாளித்துவ அரசினுள் பூரணமாக இணைந்து கொண்டுள்ளன. தொழிற்சங்கங்களைப் பொறுத்தமட்டில், முதலாளித்துவ சிக்கனக் கொள்கைகளை அமுல் செய்வதே அவற்றின் முக்கிய கடமையாக உள்ளது.

50. ஸ்டாலினிச, சமூகஜனநாயகக் கட்சிகளதும் தொழிற் சங்கங்களதும் சரிவின் அடிப்படையாகவும், தொழிலாளர் இயக்கத்துள் உள்ள சகல அமைப்புக்களதும் அடிப்படையாகவும் அவை கொண்டுள்ள தேசியவாத வேலைத் திட்டத்தின் வரலாற்று வங்குரோத்து விளங்குகின்றது. முதலாளித்துவ தேசிய அரசின் அடிப்படையில் தொழிலாள வர்க்கம் அடையக் கூடிய சிறிய நலன்களின் சாத்தியம் கூட முற்றிலும் ஒழிந்து போய்விட்டது. கடந்தகாலப் போராட்டங்கள் மூலம் தொழிலாள வர்க்கம் வென்றெடுத்த தேட்டங்களை அதிகாரத்துவம், ஒன்றன்பின் ஒன்றாக முதலாளி வர்க்கத்திடம் கையளித்து வருகின்றது.

www.padippakam.com



இறுதியில் சீர்திருத்தவாத அதிகாரத்துவங்களின் தேசிய வேலைத்திட்டங்கள், தொழிலாள வர்க்கத்தினை ஏகாதிபத்திய யுத்தத் தயாரிப்புக்களுக்கு அடிமைப்படுத்துகின்றது.

51. நான்காம் அகிலத்தின் மாபெரும் வரலாற்று நிகழ்வுச் சாத்தியமானது அதன் வேலைத்திட்டம் உலகப் பொருளாதார அபிவிருத்தியின் உள்ளார்ந்த அளவையியலில் புறநிலையாக வேரூன்றி உள்ளதிலும் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தினை உச்சரிப்பதிலும் வேரூன்றி உள்ளது. எவ்வாறெனினும் அதன் வேலைத்திட்டம் தன்னியல்பான புறநிலை பொருளாதார தொடர்ச்சியாலோ அல்லது பழைய தலைமையுடன் வெகுஜனங்கள் வெறுப்படைவதாலோ சுயமாக யதார்த்தமாகி விடாது. புரட்சிகர வேலைத்திட்டத்துக்காகப் போராடியாக வேண்டும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, தொழிலாள வர்க்கத்தின் முன்னணிப் படையை மார்க்சிசத்தின் பதாகையின் கீழ் புரட்சிகரமான முறையில் மீள அணிதிரட்டத் தன் சக்திக்குட்பட்ட சகலதையும் செய்யும். இது தொழிலாள வர்க்கத்தின் தினசரிப் போராட்டத்தில் நடைமுறை ரீதியான தலையீட்டையும் சகல வகையறாவைச் சேர்ந்த சீர்திருத்தவாதங்களுக்கு எதிரான தத்துவார்த்த யுத்தத்தினையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. ஏகாதிபத்திய யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும் எதிரான பேர்ளின் தொழிலாளர் மகாநாடு, 1953ல் அனைத்துலகக் குழு நிறுவப்பட்ட காலத்தில் இருந்து பப்லோவாத திரிபுவாதத்துக்கு எதிராக அது தொடுத்து வந்த வளம்மிக்க போராட்ட மரபுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். ஏகாதிபத்தியம், முதலாளித்துவ தேசியவாதம், ஸ்டாலினிசம் - இவற்றின் சகாக்கள் என்ற முறையில் பப்லோவாதத்தின் நாசகரமான அரசியல் பாத்திரம் முழுமையாக அம்பலமாக்கப்படவேண்டும். அனைத்துலகக் குழு பேர்ளின் மகாநாட்டினால் வழங்கப்பட்ட வாய்ப்புக்களை மண்டேல், சுலோற்றர், டோரன்ஸ், லோறா, றொபேட்சன் தலைமையிலான பல்வேறு வகையறாக்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதங்களில் இருந்தும் தெளிவான எல்லைக் கோட்டினை வரைந்து கொள்ளப் பயன்படுத்த எண்ணுகின்றது. இந்த விதத்தில் அனைத்துலகக் குழு 1915-16ல் சிம்மர்வால்ட், கிந்தல் மாபெரும் யுத்த எதிர்ப்பு மகாநாடுகளில் லெனினால் கடைப்பிடிக்கப்பட்ட உதாரணத்தினைத் பின்பற்றும். அம்மகாநாடுகளில் லெனின், சகல வகையறாக்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதம், மத்தியவாதங்களுக்கு எதிரான போராட்டம், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டவும் புரட்சிகர அனைத்துலகத்தினைக் கட்டி எழுப்பவும் அத்தியாவசியமான முன் நிபந்தனையாகும் என வலியுறுத்தினார்.

www.padippakam.com



52. பேர்ளின் மகாநாட்டுக்கான தயாரிப்பின் போது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரதிநிதிகள், உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்களுடன் பரந்தளவிலான கலந்துரையாடலில் ஈடுபடுவர். அந்நிலைமைகளின் கீழ் லியொன் ட்ரொட்ஸ்கியின் கருத்துக்கள் முன்னொரு போதும் இல்லாத அளவில் பரந்த ரீதியில் மக்களைச் சென்றடையும். நாம் ஏற்கனவே தம்மை நான்காம் அகிலத்தின் பங்காளர்கள் எனக் கருதும் குழுக்கள், போக்குக்களை அல்லது இன்னமும் அதன் வேலைத்திட்டத்தினை புரிந்து கொள்ளும் நிலையில் இருப்போரை ஒரு கலந்துரையாடலுக்கு அழைக்கின்றோம்.

53. தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தின் ஊடாக மட்டுமே ஏகாதிபத்தியமும் காலனித்துவமும், யுத்தத்தின் அவலங்களும் தோற்கடிக்கப்படுவதை உத்தரவாதம் செய்ய முடியும். இந்த ஐக்கியத்தினை, சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே அடைய முடியும்.

ஏகாதிபத்திய யுத்தம், காலனித்துவத்துக்கு எதிரான தொழிலாளர் மகாநாட்டை நோக்கி முன்னேறு!

*1991 மே 01*

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# உலக யுத்தத்துக்கும் காலனிமயமாக்கலுக்கும் எதிராகப் போராடு!

## பு. க. க. மே தினச் செய்தி

உலகத்தை மீண்டும் பங்குபோடும் கொடிய காலனித்துவத்துக்காக ஏகாதிபத்தியவாதிகளிடையே இழுபறிகள் ஏற்பட்டுள்ள மூன்றாவது அணுவாயுத உலக யுத்தத்துக்கு எதிராக உலகத் தொழிலாள வர்க்கம் - ஒன்றிணைந்த அனைத்துலகப் புரட்சிகரச் சக்தியாகக் கிளர்ந்து எழவேண்டும் என நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த மே தினத்தில் வேண்டிக் கொள்கின்றது.

கோடானுகோடி தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் காட்டுமிராண்டித்துவத்தினை நோக்கி இட்டுச் செல்லும் ஏகாதிபத்தியவாதிகளின் அழிவுமிக்க ஆக்கிரமிப்பின் தன்மை ஏற்கனவே உலகத்தின் முன்னிலையில் வெளிப்பட்டுள்ளது. அது தான் வளைகுடா யுத்தம்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை முன்னணியில் கொண்ட ஏகாதிபத்தியப் படைகளால் பாரசீக வளைகுடாவில் நடாத்தப்பட்ட தலையீடு 'குவைத்தை விடுதலை செய்வதோ' அல்லது ஈராக்கின் சதாம் ஹுசேன் ஆட்சியாளர்களுக்குத் தண்டனை வழங்கும் இராணுவ சாகஜம் அல்ல என்பதும் வேண்டியமட்டும் அம்பலமாகியுள்ளது. அதற்கு மாறாக அந்த ஆக்கிரமிப்பு, எண்ணெய் வளங்களின் மேல் ஏகாதிபத்திய ஆதிபத்தியத்தினை மீண்டும் உறுதி செய்யும் பொருட்டு

படிப்பகம்

www.padippakam.com



அராபிய நாடுகளில் நிலவி வந்த பெயரளவிலான சுதந்திரத்தினையும் துடைத்துக்கட்டும் பொருட்டு இடம் பெற்றதாகும்.

ஈராக்கின் வடக்கு, தெற்கு எல்லைகளில் அமெரிக்கப் படைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் பதாகையினைத் தாங்கிய ஏகாதிபத்தியப் படைகளும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ஆறு வாரங்களாக ஈராக்கின் மேல் இடைவிடாமல் பல்லாயிரக் கணக்கான தொன் எடையுள்ள குண்டுமாரி பொழிந்தும், தென் ஈராக்கில் இருந்து பக்தாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஈராக் படைகள் உட்பட இலட்சத்துக்கும் அதிகமானோரை நடுவீதியில் கொன்று தள்ளியும் உண்டுபண்ணிய பேரழிவின் மேல் ஏகாதிபத்தியவாதிகள் இன்று பிராந்தியத்தின் எண்ணெய் வழங்களைக் கொள்ளையடிக்கும் பொருட்டு இராணுவ முகாம்களை அமைத்து வருகிறார்கள்.

பொருளாதாரத் துறையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்குக் கைநழுவிப்போன உலக ஆதிபத்தியத்தினை மீண்டும் வென்றெடுக்கும் நடவடிக்கைகளின் நச்சுத்தன்மை இன்று வெளிப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான தொன் குண்டுமாரி பொழி நாட்டின் தேசிய பொருள்ாதார, அரசியல் அமைப்பினைப் பல நூற்றாண்டுகளால் இல்லையேல் பல தசாப்தங்களால் பின்னடிக்கச் செய்! ஏகாதிபத்தியப் படைகளின் கொடிய ஆட்சிக்குட்பட்ட காலனிகளாக அந்நாடுகளை மாற்று! அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் இன்றைய நிலைப்பாடு இதுதான்.

## சவால்

இது இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சவால் செய்ய முடியாத அமெரிக்க ஆளுமையின் கீழ் உலக ஏகாதிபத்திய முறையைக் கொண்டு நடாத்தக் கையாண்ட விதிமுறைகளிற்கு முற்றிலும் மாறானது. இரண்டாம் உலக யுத்தம் ஏனைய சகல ஏகாதிபத்திய சக்திகளைப் பொறுத்தமட்டில் உண்டு பண்ணிய அழிவுகளை தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் பிரகடனம் செய்த அமெரிக்க சமாதானத்தினதும், ஜனநாயகத்தினதும் சகாப்தம், ஒரு வரலாற்றுடன் சங்கமமாகிவிட்ட சகாப்தமாகிவிட்டது. கடந்த 4 1/2 தசாப்தங்களாக உலக உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் உண்டான பிரமாண்டமான மாற்றங்கள் மூலம் அமெரிக்கப் பொருளாதாரத்தின் ஆளுமை சிதறிச் சின்னாபின்னமாகிப் போயுள்ளது. அது உலகுக்கு கடன் வழங்குபவர் என்ற நிலையில் இருந்து இன்று பிரமாண்டமான கடனாளியாகியுள்ளது. இதன் பரிமாற்றங்கள் நானாவிதமான விதத்தில் வெளிப்பாடாகியுள்ளன.

www.padippakam.com



அமெரிக்க ஏகாதிபத்தியம் முகம் கொடுத்துள்ள பிரமாண்டமான வர்த்தகப் பற்றாக்குறையையும் மாதாந்தம் அதிகரித்துச் செல்லும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறையையும், மூலப்பொருள் வழங்களையும், சந்தைகளையும் தம் கைக்குள் போட்டுக் கொள்வதன் மூலம் தீர்த்துக் கொள்ள புஷ் ஆட்சியாளர்கள் தீர்மானம் செய்துள்ளார்கள். இதனை யுத்தப் பிரகடனம் மூலம் சாதிக்கவும் – காலனிகளை உருவாக்கும் உலக யுத்தத்தில் குதிக்கவும் அமெரிக்க ஆட்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

கண்மண் தெரியாமல் குண்டுமாரி பொழிந்து, தரைமட்டமாக்கும் நாடுகளில் நிதி மூலதனத்தைப் பாய்ச்சுவதற்கு அமெரிக்காவினுள் தொழிலாள வர்க்கத்தின் சம்பளம், வாழ்க்கைத் தரத்தையும் அடிமை மட்டத்திற்கு இறக்கும் அவசியம் புஷ் நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ளது. பக்டரிகளை நூற்றுக்கணக்கில் மூடவும் வேலையற்றோர் எண்ணிக்கையை மாதாந்தம் நூற்றுக்கு 10 வீதத்தால் அதிகரிக்கவும் குடியரசு, ஜனநாயகக் கட்சிகள் இரண்டினையும் சேர்ந்த ஆளும் வர்க்கம் களத்தில் குதித்துள்ளதன் அர்த்தம் இதுவே.

## லெனின்

அமெரிக்கத் தொழிலாள வர்க்கத்தினை அழிவுள் தள்ளி மூலதனத்தினை மலையெனக் குவிக்கும் அமெரிக்கா எதிர்பார்ப்பது என்ன? ஏனைய ஏகாதிபத்தியவாதிகளுடன் சகவாழ்வு நடாத்தும் முதலீட்டுத் திடல்களா? இல்லை. தமது ஏகபோகத்துக்கு உட்பட்ட அமெரிக்கக் காலனிகளாகும். லெனின் குறிப்பிட்டது போல் "மூலதனத்தினை ஏற்றுமதி செய்கையில் காலனிகளைக் கைப்பற்றுவதற்கான உந்துதலை வழங்குவதே அவசியமாக உள்ளது. அதற்குக் காரணம், காலனி சந்தைகளில் போட்டியை ஒழிப்பது, விநியோகத்தை உத்தரவாதம் செய்வது, அவசியமான உறவுகளைத் கட்டி எழுப்புதல் ஆகியவற்றின் பேரில் ஏகபோக முறையைப் பாவித்தல் (சில வேளை பாவிக்கக் கூடிய ஒரு முறை அவைதான்) இலகுவாய் இருப்பதே." (ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்)

ஜோர்ஜ் புஷ் ஜனாதிபதியாகியதன் பின்னரான இரண்டு வருடங்களுள் ஏற்கனவே இரண்டு நாடுகளில் (பனாமா, ஈராக்) ஆக்கிரமிப்பு இடம்பெற்று, அந்நாடுகளுள் அமெரிக்கப் படைகளை இருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அது தனியொரு ஏகாதிபத்தியம் சுதந்திரமாக உலகம் பூராவும் செய்யக் கூடிய காரியம் அல்ல. அவ்வாறெனின் ஏனைய ஏகாதிபத்தியச் சக்திகள் சுய விருப்புடன் அமெரிக்க ஆளுமையை ஏற்றுக்கொண்டு, ஏகாதிபத்திய

www.padippakam.com



விதிமுறையைக் கைவிட வேண்டும். அது ஏகாதிபத்தியத்தின் கீழ் நடைமுறைப் படுத்த முடியாத ஒரு விதிமுறையாகும். இந்நூற்றாண்டின் முதல் அரை நூற்றாண்டில் 11 ஆண்டுகள் முழு உலகினையும் தழுவிய ஏகாதிபத்திய யுத்தம் இரண்டுக்கு உள்ளாகக் காரணம் அதுவே.

இன்று மீண்டும் ஒருமுறை ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான போட்டியானது சகல சமரசங்களும், பேச்சுவார்த்தைகளும் சரிந்து கொட்டி, கொடிய இராணுவ ஆட்சிக்காக ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு இடையேயான ஏற்பாடுகள் தீர்த்து வைக்கப்பட முடியாத ஒரு நிலையிலேயே ஏற்பட்டுள்ளது.

பொருளாதார நடைமுறைக்கான துறையானது தொடர்ந்தும் தேசிய அரச துறையாகவன்றி, பூகோள ரீதியிலான துறையாகியுள்ளது. ஒவ்வொரு ஏகாதிபத்திய வல்லரசும் ஏனைய ஏகாதிபத்திய வல்லரசுகளின் பொருளாதார, அரசியல் பிராந்தியத்தினுள் பாய்ந்து விழுந்து, அவற்றினுள் தமது ஆளுமையை நிலைநாட்டும் போரில் ஈடுபட்டுள்ளன. வளைகுடா யுத்தத்தில் அமெரிக்க, பிரித்தானிய, ஜேர்மன், ஜப்பான் முதலான ஏகாதிபத்திய வல்லரசுகளிடையே நிலவிய இணக்கமானது, அபிவிருத்தியடையாத நாடுகளில் பேரளவில் இருந்து வந்த சுதந்திரத்தைக் கூட ஒழித்துக்கட்டி, அவற்றை மீண்டும் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் நிலவிய பாணியில் மிலேச்ச காலனித்துவ ஆட்சிக்கு உட்படுத்த வேண்டும் என்பதில் மட்டுமே இருந்து வந்தது. அது எந்த ஏகாதிபத்திய வல்லரசின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்பது தொடர்பான நாய்ச் சண்டை இந்த இணக்கத்தின் அடியில் சீர் செய்ய முடியாத வகையில் நிலவுகின்றது: அந்த விதத்தில் வளைகுடா யுத்தமானது உலகினை மீண்டும் கூறுபோடும் மூன்றாம் ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் ஆரம்பமாகும்.

ஆசிய, 'சார்க்' நாடுகளுடன் நெருங்கிய உறவினை ஏற்படுத்திக் கொள்ள ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் முயற்சியானது, ஆசியாவிலும் பசுபிக் கரைப் பிராந்தியத்திலும் தமது ஆதிபத்தியத்தினை வளர்த்துக் கொள்வதாகும். கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியன் உள்ளடங்கலான ஐரோப்பியப் பிராந்தியத்தில் தனது பொருளாதார, அரசியல் ஆளுமையைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஜேர்மன் ஏகாதிபத்தியவாதிகள் ஈடுபட்டுள்ளனர். இதே சமயம் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வடதென் அமெரிக்கப் பிராந்தியங்களைத் தமது ஆளுமைக்குள் போட்டுக் கொள்ளும் இராணுவ நடவடிக்கையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளனர். பனாமா மீதான ஆக்கிரமிப்பும் லத்தீன் அமெரிக்காவில் போதைப் பொருள்களுக்கு எதிரான யுத்தமும் இந்த இலக்கில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையாகும். இந்தப் புதிய போக்கின் அர்த்தம், முழுப் பூகோளத்தையும் ஏகாதிபத்திய அணுவாயுத யுத்தத் திடலாக மாற்றுவதே.

www.padippakam.com



## பங்கீடு

உலகத்தை மீண்டும் பங்கிட்டுக் கொள்ளும் மிலேச்ச ஏகாதிபத்தியத் திட்டம் வளர்ச்சி காண்கையில் எதிரியின் முன்நிலையில் முகட்டைப் பார்க்கும் நாய்க் குட்டி போன்று ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் பூரண அடிபணிவினைக் காட்டிக் கொண்டுள்ளனர். உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தினைக் காட்டிக் கொடுத்துவிட்டு, ஏகாதிபத்தியத்துடன் சகவாழ்வில் ஈடுபட்டுக் கொண்டு, சோசலிசத்தை தனித்தனி நாடுகளுக்குக் கட்டுப்படுத்தி வைக்கச் செயற்பட்ட ஸ்டாலினிச அதிகாரத்துவம், இன்றைய உலக அபிவிருத்திகளின் எதிரில் முகம் கொடுத்த நெருக்கடியினால் கவிழ்ந்து கொட்டத் தொடங்கியது. இதனால் ஏகாதிபத்தியம் தொடர்பான அதன் எதிர்ப்புச் சக்தி கூட முழுமனே ஒழிந்து போயிற்று. இன்று மாஸ்கோ – பீகிங் ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் இரண்டும் ஏகாதிபத்திய ஏகபோக முதலாளித்துவத்தின் தரகு முதலாளிகளாகச் செயற்படுகின்றன.

வளைகுடா யுத்தம் வெளிக் கொணர்ந்த மத்திய கிழக்கு எண்ணெய் நிலங்களைக் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்திய முயற்சியைச் சுதந்திரமாகக் கொண்டு நடாத்தும் பொருட்டு ஒரு எதிர்ப்பு வார்த்தை தன்னும் ஸ்டாலினிஸ்டுகள் பேசியதில்லை. இன்று போல்டிக் பிராந்தியத்தில் உள்ள சிறிய குடியரசுகளின் தேசியவாதிகளைத் தூண்டிவிட்டு, சோவியத் யூனியனைச் சிதறடிப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகள் கொணரும் பிற்போக்கு உபாயங்களுக்குக் கதவு திறந்துள்ளனர். உலகப் புரட்சிக்குக் குழிபறிக்கும் ஸ்டாலினிச விதி முறையானது உலகப் புரட்சியின் முதல் நடவடிக்கையான 1917 அக்டோபர் புரட்சியின் சகல வெற்றிகளையும் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பலிகொடுக்கச் செயற்படுவதாக இருக்கும் என்ற லியொன் ட்ரொட்ஸ்கியின் தீர்க்கதரிசனத்தை நிரூபித்துள்ளது.

கிழக்கு ஐரோப்பாவின் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சிகள் கவிழ்ந்து கொட்டியதன் மூலம் வெளிப்பாடான யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பின் வெடிப்பின் மத்தியில் ஏகாதிபத்தியவாதிகள் புதிய உலக அமைப்புக்கான ஆக்கிரமிப்புப் பாய்ச்சலில் ஈடுபட்டுவரும் நிலையில் சகல தேசியவாத வேலைத் திட்டங்களதும் வங்குரோத்து முழுமனே அம்பலமாகிக் கொண்டுள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய உலக அமைப்பினைக் கொண்டு நடாத்தும் பொருட்டுத் திணிக்கப்பட்ட உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிதியமைப்புக்களின் உறுதியுடன் உயிரைப்பிடித்து வைத்திருந்த அபிவிருத்தியடையாத நாடுகளின் தேசிய முதலாளி வர்க்கம், இன்று 'தேசிய சுதந்திரம்'

www.padippakam.com



பற்றிய சகல கதையளப்புக்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, முழுமனே ஏகாதிபத்தியத்துக்கு அடிபணியுமாறு நெருக்கப்பட்டுள்ளன. உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்துக்கு எதிராக தூண்டிவிடப்பட்ட 'சுயபூர்த்தி', 'சுயசக்தி' பற்றிய தேசிய முதலாளித்துவத்தின் சகல நப்பாசைகளும் இன்று வெடித்துச் சிதறி உள்ளன. தேசிய முதலாளிகளின் 'சுதந்திரம்' பற்றிய கருத்துக்கள், இன்று தேசியப் பொருளாதாரத்தினை எந்த ஏகாதிபத்திய எஜமானனுக்கு என்ன விலைக்கு விற்றுத்தள்ளுவது என்பதைத் தெரிவு செய்யும் சுதந்திரமாகவே உள்ளது. அது ஏகாதிபத்திய யுத்தத்தின் தீப்பிளம்பினுள் சகல நாடுகளையும் தள்ளிவிடுவதற்கான பாதையாகும்.

ஏகாதிபத்தியவாதிகளுடன் நல்ல வாய்ப்பான கொடுக்கல் வாங்கல்களை எதிர்பார்த்த ஈராக்கின் சதாம் ஹுசேன் ஆட்சியாளராகட்டும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு விமானத் தளங்களைத் திறந்துவிட்டு, எண்ணெய் நிரப்புவதன் மூலம் கைலஞ்சம் பெற்றுக்கொள்ள முயன்ற இந்திய, இலங்கை ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளராகட்டும் நிலைமை இதுவே. இந்த ஆட்சியாளர்களின் 'சுயாதீனம்' சவூதி அரேபிய, எகிப்து, குவைத் அல்லது துருக்கியின் ஏகாதிபத்திய சார்பு ஆட்சியாளர்களின் சேவைகளில் இருந்து வேறுபடுத்திக்காட்டுவதானால் – முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துடன் மக்கள் முன்னணி அமைத்துக் கொண்டு, சகவாழ்வு நடாத்துவதன் மூலம் ஏகாதிபத்தியத்தின் அழிவுமிக்க பிடியினைத் தத்தம் நாடுகளில் தொடர்ந்தும் பேணிக்கொள்ள உதவும் ஏகாதிபத்தியச் சார்பு அதிகாரத்துவத்திலிருந்தும் அதன் திரிபுவாதக் கைக்கூலிகளிலிருந்தும் மட்டுமே வேறுபடுத்த முடியும்.

ஸ்டாலினிச அதிகாரத்துவங்களினதும் தேசிய முதலாளி வர்க்கங்களினதும் முற்போக்குப் பாத்திரம் பற்றிப் பேசிக்கொண்டு, தொழிலாள வர்க்கத்தின் 'புரட்சிகர வேலைத்திட்டத்தினைக் காக்கவும் புரட்சிகரக் கட்சிகளை கலைத்துவிடவும் தெழிறபட்ட, பப்லோவாதிகளிற்கும் அதன் வெளிப்பாடான நானாவிதமான தேசியவாதச் சந்தர்ப்பவாதப் போக்குக்களுக்கு எதிராகவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1953ல் இருந்து தொடர்ந்து போராடியது. இதன் மூலம் உலகத் தொழிலாள வர்க்கத்துக்கு அவசியமான பாட்டாளி வர்க்க அனைத்துலகப் புரட்சிகரப் பதாகை பேணப்பட்டது. பிரித்தானியத் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் தலைவர்களான ஹீலி, பண்டா, சுலோற்றர் ஓடுகாலிகளை அனைத்துலகக் குழுவில் இருந்து ஒழித்துக்கட்ட 1982 தொடக்கம் அமெரிக்க 'வேர்க்கஸ் லீக்' போராடியது. இது 1985ல் அனைத்துலகக் குழுவின் பிளவாக ருசுப்படுத்தப்பட்டமை, அனைத்துலகக் குழு தேசியவாத சந்தர்ப்பவாதத்துக்கும் கலைப்புவாதத்துக்கும் எதிராக அரசியல் ரீதியில் ஆயுதபாணியாக்கப்

www.padippakam.com



பட்டதன் புதிய கட்டத்தினைக் குறித்தது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் உலகத் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் புரட்சிகரப் பாத்திரத்தினையும் அந்த வர்க்கத்தினை அரசியல் ரீதியில் தயார் செய்வதற்கான தகுதியையும் இந்தத் திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டம் மூலமே கைவரப் பெற்றது. மூன்றாம் உலக யுத்தத்தின் பயமுறுத்தல் உருவாகியுள்ள இன்றைய தருணத்தில் மனித இனத்தின் எதிரில் உருவாகியுள்ள மனித கலாச்சாரமா அல்லது காட்டுமிராண்டித்தனமா என்ற பதிலீடு அனைத்துலகக் குழுவின் முன்நோக்குப் பிரேரணையில் கீழ்க்கண்ட முறையில் சமர்ப்பிக்கப்பட்டது:

"ஒன்றில் பாட்டாளி வர்க்கம் சமூக உரிமையின் அடிப்படையில் முழு உலகத்தினதும் உற்பத்திச் சக்திகளை மறுசீரமைப்பதன் மூலமும் முதலாளி வர்க்கத்தினைத் தோற்கடிப்பதன் மூலமும் உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுகளுக்கும் இடையேயான இம்முரண்பாட்டினை முற்போக்கான முறையில் தீர்க்க வேண்டும். அல்லது உற்பத்திச் சக்திகளை அழிப்பதோடு மனித இனத்தினை அடியோடு அழிப்பதன் மூலம் முதலாளித்துவம் தனது தீர்வினைத் தேடிக்கொள்ளும்." (உலக முதலாளித்துவ நெருக்கடியும் நான்காம் அகிலத்தின் பணியும் - தொழிலாளர் பாதை வெளியீடு)

சோசலிசத்தின் அடிப்படையில் உலக உற்பத்திச் சக்திகளை மறுசீரமைத்து, முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசுவதன் மூலம் உலகப் பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுக்கும் இடையேயான முரண்பாடுகளை முற்போக்கான முறையில் தீர்க்கக் கூடிய புரட்சிகர சமூக சக்தி தொழிலாள வர்க்கமே. அந்த வரலாற்றுப் பாத்திரத்தினை அது நிறைவேற்றா வண்ணம் சீர்திருத்தவாத, வர்க்கச் சமரச அதிகாரத்துவங்களால் தடுக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய நாடுகளதும், பின்தங்கிய நாடுகளதும் முதலாளித்துவ ஆட்சியாளர்களும் ஸ்டாலினிச அதிகாரத்துவ ஆட்சியாளர்களும் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராகத் தொடுத்து வரும் நாசகாரத் தாக்குதல்களை எதிர்த்து தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் போராட்டப் பாதையில் காலடி வைக்க மீண்டும் மீண்டும் முயன்றனர்.

இவர்களைக் காட்டிக் கொடுக்க சகல நாடுகளிலும் உள்ள அதிகாரத்துவங்கள் தொழிற்பட்டு வருகின்றன. தொழில் அழிப்பு, சம்பள வெட்டு, சேமநல சேவைகள் ஒழிப்பு முதலான தாக்குதல்களின் முன்நிலையிலும், இன, மத ஒடுக்குமுறைகளின் எதிரிலும், இராணுவ-பாசிச அடக்குமுறைகளின் எதிரிலும் தொழிலாள,

www.padippakam.com



ஒடுக்கப்படும் மக்களை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கித், தனிமைப்படுத்த இவர்கள் தொழிற்படுகின்றார்கள். 5 இலட்சம் கொலைகாரப் படைகளை இறக்கி, ஈராக் மக்களுக்கு எதிராகத் தொடுத்த பரந்த இராணுவத் தாக்குதலுக்கு எதிராக உலகத் தொழிலாள வர்க்கத்திடமிருந்து எந்தவிதமான சுயாதீன எதிர்ப்பும் உருவாகா வண்ணம் தவிர்ப்பதில் இவர்கள் அக்கறை காட்டினர். இந்த அதிகாரத்துவங்கள் நாட்டுக்கு நாடு தொழிற்பட்ட விதத்தினை நோக்கின், இவர்கள் ஏகாதிபத்திய அணுவாயுத யுத்தத்தின் இரத்த வெள்ளத்தில் முழு மனித இனத்தினையும் மூழ்கடிக்கப் பிற்போக்கு ஆளும் வர்க்கத்துடன் அணிதிரண்டுள்ள முறைமை நன்கு புலனாகின்றது.

சீர்திருத்தவாத, வர்க்கச் சமரச அதிகாரத்துவங்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவதன் மூலம் இப்பிற்போக்குத் தலைவர்களைத் தூக்கிவீசி, புரட்சிகர மார்க்சிசத் தலைமையின் கீழ் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டாமல், ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களும் திணிக்கும் அழிவில் இருந்து தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை மீட்க முடியாது. இதற்கான வேலைத்திட்டத்தினையும், தலைமையையும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளுமே வழங்குகின்றன.

## இந்தியத் துணைக்கண்டம்

சீர்திருத்தவாதிகளும், ஸ்டாலினிச அதிகாரத்துவங்களும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களைக் காக்கும் பொருட்டுப் தம்மை அர்ப்பணம் செய்து கொண்டுள்ளன. இந்த வழியினை தொழிலாள - ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிப்பது பற்றி இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து கிடைக்கும் அறிக்கைகள் மிகவும் கேவலமான வடிவங்களை எடுத்துள்ளன. இவை ஏனைய இடங்களில் இழைக்கப்பட்ட காட்டிக் கொடுப்புக்களை எல்லாம் தாண்டிச் செல்கின்றது.

இலங்கையில் சமசமாஜ, ஸ்டாலினிச தலைவர்களும் இந்தியாவில் ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் திணிக்கப்பட்ட பிற்போக்கு முதலாளித்துவ அரசுகளுக்கும் முதலாளித்துவ அரசாங்கங்களுக்கும் அடிபணிந்த மையானது கோடானுகோடி இந்திய, பாகிஸ்தானிய, பங்களாதேஷ், பர்மிய, இலங்கை மக்களுக்குச் சகிக்க முடியாத வேலையின்மை, பஞ்சம், பட்டினியையே தேடிக் கொடுத்துள்ளது. இவற்றுக்கு எதிராகத் தலைதூக்கும் மக்கட் போராட்டங்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் தயாரிப்பு நடவடிக்கையாக ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ

www.padippakam.com



ஆளும் வர்க்கம், தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை இடைவிடாமல் இன, மத மோதுதல்களில் ஈடுபடச் செய்து, இராணுவ – பாசிச சர்வாதிகாரத்தினை திணிக்க முயன்று வருகின்றது. 1947–48ல் இந்தியாவை பிரிவினை செய்த வேளையில் இந்தியத் துணைக்கண்டம் பூராவும் இடம் பெற்ற இரத்தக் களரியைத் தூண்டும் ஒரு தொகை மோதுதல்களைத் தூண்டிவிடுவதில் பிற்போக்கு ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் பயங்கர இயக்கமானது இந்தக் காட்டுமிராண்டி நடவடிக்கையின் ஒரு பாகமே.

யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய உலக அமைப்பின் பொறிவானது இந்தியத் துணைக்கண்டத்தின் உள்ளே ஏகாதிபத்தியச் சார்பு தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பிற்போக்கும், அழிவும் இலட்சோப இலட்சம் மக்களிற்கு வசிப்பிடமும் இல்லாமல் செய்வதன் மூலம் வெளிப்பாடாகியுள்ளது. இன்று பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, இந்தியா, இலங்கை முதலான சகல முதலாளித்துவ நாடுகளில் திணிக்கப்படும் இன–மத ஒடுக்கு முறைகளைச் சகிக்க முடியாத ஒடுக்கப்படும் மக்களும், ஏழைகளும் ஒரு நாட்டில் இருந்து மறு நாட்டிற்கு அகதிகளாக கலைக்கப்பட்டு வருகின்றார்கள். இந்தியாவின் பஞ்சாப், காஷ்மீர் பகுதிகளில் இருந்து பாகிஸ்தானுக்குள் பெருக்கெடுக்கும் அகதிகளும் பங்களாதேஷ் முஸ்லீம் அடிப்படைவாதிகளின் ஒடுக்குமுறையைச் சகிக்க முடியாமல் இந்தியாவுக்குள் பெருக்கெடுக்கும் இலட்சக்கணக்கான சிக்மாக்கள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களும், பர்மாவின் இராணுவ ஒடுக்குமுறையினாலும் முஸ்லீம் எதிர்ப்பினாலும் பங்களாதேசுக்குள்ளும் இந்தியாவுக்குள்ளும் பெருக்கெடுப்போரும், வட–கீழ் மாகாண தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினால் அவர்களின் வீடுவாசல்களில் இருந்து தூரத்தியடிக்கப்பட்ட 8 இலட்சம் மக்கள் இந்தியாவுக்குச் சென்றமையும் இந்தச் சரணாகதியடைந்த மாபெரும் மக்கட் சனத்தொகையின் ஒரு சிறு துளியாகும்.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் மாபெரும் வெற்றிகளை ஈட்டிக் கொண்டுள்ள இன்றைய உலக நிலையில் குறைந்தபட்ச மனித வாழ்க்கை வசதிகள் தன்னும் இல்லாமல் இங்ஙனம் புகலிடம் தேடிக்கொண்டுள்ளமை இலட்சோப லட்சம் மக்கள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சிகளுக்கு எதிராகத் தொடுக்கும் பலத்த குற்றச் சாட்டாகும்.

இது வெறுமனே இன்று அடைக்கலம் தேடிக் கொண்டுள்ள மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அழிவுமட்டுமன்றி, முழுத் தொழிலாள – ஒடுக்கப்படும் மக்கள் மீதும் மிலேச்ச ஏகாதிபத்திய இராணுவ

www.padippakam.com



ஆட்சியினைத் திணிக்க எடுக்கப்பட்டுவரும் ஆரம்ப நடவடிக்கையாகும். இதனை ஈராக்கில் இடம்பெறும் சம்பவங்கள் எதுவித சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபித்துக் கொண்டுள்ளன. அந்தந்த நாடுகளில் மக்கள் வாழ்க்கைகளை நாசமாக்கும் முறையில் தலையிட்டுவரும் ஏகாதிபத்திய வாதிகள் அந்நாடுகளில் தமது படைகளை இருத்தும் திட்டங்களுக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்து வருகின்றார்கள். இந்த விதத்திலேயே ஈராக் குர்திஷ் மக்களின் அவலநிலையை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தமும் அதனால் உருவான அகதிகள் பெருக்கமும் 1987ல் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவு பெற்ற இந்தியப் படைகளின் நுழைவுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. இன்று இந்த வேலைத்திட்டம், உலகம் பூராவும் நடைமுறைப்படுத்தும் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலைமையில் பாரதீய ஜனதா கட்சி மற்றும் முதலாளித்துவக் கட்சிகள், குழுக்களும் முஸ்லீம் எதிர்ப்பு இந்து வெறியைத் தூண்டுவதானது இந்தியாவிலும் துணைக் கண்டம் பூராவும் ஏகாதிபத்திய இராணுவத் தலையீட்டுக்கான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதாக உள்ளது.

ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்களைத் தூக்கி வீசும் பொருட்டு ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் கிராமப்புற ஏழைகளையும் அணிதிரட்டி, தொழிலாளி வர்க்கம் சுயாதீனமாக மேற்கொள்ள வேண்டிய அரசியல் தலைமையின் அவசியத்தினை இது தோற்றுவிக்கின்றது. ஏகாதிபத்தியவாதிகள் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் சேர்ந்து செய்து வரும் சதிகளை ஒழிக்கவும், தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை மூன்றாம் உலக யுத்தத்திற்குப் பலியிடுவதைத் தவிர்க்கவும் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவினைப் பெற்ற தொழிலாள வர்க்கத்தினால் மட்டுமே முடியும். தொழிலாள வர்க்கம் அரச அதிகாரத்தினைக் கைப்பற்றுவதன் மூலம் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களினால் தீர்க்கப்படாத ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய உரிமைகளை உறுதி செய்தல், ஏழை விவசாயிகளின் நிலம் உரிமையை வழங்குதல் உள்ளடங்கலான ஜனநாயகப் பணிகளை இட்டு நிரப்புவதன் மூலம் சோசலிச சொத்து முறையை ஸ்தாபிதம் செய்ய வேண்டும்.

உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளையின் பேரில் இடம்பெறும் அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் தனியார்மயமாக்கமும், தோட்டங்கள் பக்டரிகளில் இலட்சக்கணக்கான தொழில்கள் வெட்டும், விவசாயிகளுக்கும் கிராமப்புற ஏழைகளுக்கும் கிடைத்து வந்த மானிய ஒழிப்பும் சேமநல சேவைகள் வெட்டும்,

www.padippakam.com



ஏகாதிபத்திய மூலதனத்தின் நலனின் பேரில் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளாகும். 'சுதந்திர' காலப்பகுதி எனப்பட்ட காலத்தில் வெளிநாட்டுக் கம்பனிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டுக் கட்டியெழுப்பப்பட்ட தேசியக் கைத்தொழில், நிறுவன அமைப்பினைச் சிதறடித்து, நிதி மூலதனத்தின் நலனுக்குப் பொருத்தமான முறையில் ஏகாதிபத்திய ஏகபோகங்களின் வேட்டைக்களமாக இந்நாடுகளை மாற்றுவதே வங்கியாளர்களின் கட்டளையின் அடிநாதமாகும்.

இந்தத் தொழிற்பாட்டின் மூலம் சிதறடிக்கப்படுவது பின்தங்கிய நாடுகளின் பொருளாதார அமைப்பு மட்டுமன்றி 'பெரொஸ்ரொயிகா' அல்லது முதலாளித்துவ புனருத்தாரணத்தின் கீழ் ஸ்டாலினிஸ்டுகள் சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பா, சீனாவில் மட்டுமன்றி 15 ஆண்டுகளுக்கு முன் ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை செய்ததாக்க் கூறிக்கொண்ட வீயட்னாமிலும் பொருளாதார அமைப்பு முழுமனே சிதறடிக்கப்பட்டு, ஏகாதிபத்திய நிதி மூலதனப் பாய்ச்சலுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஏகாதிபத்திய நாடுகளிலும் பெருமளவிலான கைத்தொழில்கள் மூடப்பட்டு வருவ தோடு இலட்சக்கணக்கான தொழில் வெட்டுக்களும் இடம் பெற்று வருகின்றது. இந்த இலட்சணத்தில் மறுசீரமைப்பு இடம் பெறுகின்றது. உற்பத்திச் சக்திகளின் முன்னொரு போதும் இல்லாத வளர்ச்சியின் சிதறடிக்கப்பட்டுள்ள பழைய உலக அமைப்புக்குப் பதிலாக புதிய ஏகாதிபத்திய உலக அமைப்பினைக் கட்டி எழுப்பும் அவசியத்தின் அடிப்படையிலேயே இவை இடம்பெற்று வருகின்றன. தேசியப் பொருளாதாரங்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன. ஏகபோகங்களின் நலன்களுக்கு ஏற்ப உற்பத்தியும் விநியோகமும் மீண்டும் மறுசீரமைக்கப் படுகின்றன. இந்தத் தொழிற்பாடு இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இடம்பெற்ற முறைமையை விளக்குகையில் லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"மூலப்பொருட்களின் பெரும் முக்கியமான மூலகங்கள் தொடர்பாக ஏகபோகங்கள் மூலதனத்தின் ஆளுமையைப் பெரிதும் அபிவிருத்தி செய்து கொண்டுள்ளன. இதனால் கூட்டிணைக்கப்பட்டதும் கூட்டிணைக்கப்படாததுமான கைத்தொழில்களுக்கு இடையே முரண்பாடுகள் உக்கிரம் கண்டுள்ளன." (ஏகாதிபத்தியம் முதலாளித்து வத்தின் உச்சக் கட்டம்)

நிதி மூலதனத்தின் நலன்களுக்கு ஏற்ற புதிய ஏகாதிபத்திய உலக அமைப்பின் பொருட்டுச் செய்யும் பொருளாதார மாற்றங்களுக்கும் இராணுவமயமாக்கல்களுக்கும் முன்நிலையில் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் அதற்குச் சமமான

www.padippakam.com



பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். இவற்றுக்கான தீர்வு, ஏகாதிபத்திய உலக அமைப்பினை உலகச் சோசலிசப் புரட்சி மூலம் தூக்கிவீசும் பணியிலேயே தங்கியுள்ளது. ஏகாதிபத்தியத்துக்கும் அதன் ஏஜன்சியான தேசிய முதலாளித்துவ ஆட்சிக்கும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கும் தொழிலாள வர்க்கத்தினைக் கட்டிப் போடச் செயற்படும் சீர்திருத்தவாத, சந்தர்ப்பவாத, குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளைத் துரத்தியடித்து, புரட்சித் தலைமையைச் சூழ தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டுவதே அப்பணியை வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு அவசியமான முன்நிபந்தனையாகும். இதன் பொருட்டு பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் போராடுகின்றன.

தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்துக்கு ஆதரவு வழங்கியும், கிராமப்புற இளைஞர்களுக்கு எதிராக படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள முதலாளித்துவ அரச படைகளின் கையாட்களாகியும் சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ - இ.தொகா. தலைமைகள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியின் பாதுகாவலர்களாகியுள்ளனர். யூ.என்.பி-சிறீலங்கா முதலாளித்துவக் கட்சிகளுடன் மக்கள் முன்னணி அமைத்துக் கொண்டுள்ள இத்தலைமைகள், மக்கள் முன்னணியைக் காப்பதன் அடிப்படையில் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் சகல போராட்டங்களையும் தவிர்த்துக் கொள்வதோடு, அப்போராட்டங்கள் தோன்றும் சகல இடங்களிலும் அவற்றைக் காட்டிக்கொடுத்தும் வருகின்றனர்.

தொழிலாள வர்க்கத்தினைக் காட்டிக் கொடுக்கத் தொழிற்படும் இத்துரோகத் தலைவர்கள் கடைப்பிடித்து வரும் வேலைத்திட்டத்தினால் குழம்பிப் போகும் மத்தியதர வர்க்க ஏழை மக்கட் பிரிவினரிடையே அரசியல் ஆளுமையைக் கட்டி எழுப்ப குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்கள் தோன்றுகின்றன. தேசியவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இயங்கும் இவை, ஏதேனும் ஒரு ஏகாதிபத்தியக் கோஷ்டியின் அல்லது முதலாளித்துவ ஆளும் வர்க்கப் பகுதியினரின் நலன்களுக்குத் தோள் கொடுக்கின்றன. தொழிலாள வர்க்க எதிர்ப்பு, இனவாத, பாசிச இயக்கமாக மாறிய ஜே.வீ.பி. இந்த தொழிற்பாட்டிற்கு நல்லதோர் உதாரணமாகும். தமிழ் தேசிய இனத்தினுள் செயற்பட்ட புளொட், ஈபிஆர்எல்எப், டெலோ, ஈரோஸ், ஈபிடீபி போன்ற குழுக்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் இனவாத முதலாளித்துவ ஆட்சியாளர்களின் எடுபிடிகளாக மாறியதன் மூலமும் விடுதலைப் புலிகள் இயக்கம் ஏகாதிபத்தியச் சார்பு இந்திய ஆளும் வர்க்கத்துடனும் இலங்கையின் யூ.என்.பி. அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தைகளுக்கு

www.padippakam.com



முன்வந்ததன் மூலமும் இந்தத் தேசியவாதக் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் அரசியல் வங்குரோத்தினையும் பிற்போக்கினையும் போதுமான அளவு நிதர்சனமாக்கியுள்ளது.

## புரட்சித் தலைமை

இந்தச் சகல அபிவிருத்திகளும் தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களதும் பாரிய நலன்களை இட்டு நிரப்ப அவசியமான அனைத்துலகவாத புரட்சித் தலைமை பற்றிய பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகமும் லியொன் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்தியத் துணைக்கண்ட தொழிலாள வர்க்கத்தினை புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டப் போராடி வருகின்றன. ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் சகிக்க முடியாத ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் ஆட்பட்டு வரும் மதக் குழுக்கள், தாழ்த்தப்பட்ட மக்களும், இளைஞர்கள், இல்லப் பெண்கள், கிராமப்புற ஏழை விவசாயிகள் அனைவரையும் தொழிலாள வர்க்கத்தினைச் சூழப் புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதன் மூலம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசினைத் தூக்கி வீசி, சோசலிச சோவியத் குடியரசு ஒன்றியத்தினை நிறுவுவதே அப்போராட்டத்தின் இலக்காகும். உலக சோசலிசப் புரட்சியின் முன்நோக்கின் அடிப்படையில் இடம்பெறும் இப்போராட்டத்துடன் இணைவதென சகல தொழிலாள வர்க்கப் போராளிகளும், ஒடுக்கப்படும் மக்களும் இந்த மே தினத்தில் தீர்மானம் செய்ய வேண்டும்.

- ☼ *யூ.என்.பி.யை வெளியேற்று!*
- ☼ *மக்கள் முன்னணிகளை நிராகரி!*
- ☼ *இலங்கை–தமிழ் ஈழம் சோசலிச குடியரசினைக் கட்டி எழுப்பு!*
- ☼ *இந்தியத் துணைக்கண்ட சோசலிச சோவியத் குடியரசு ஒன்றியத்தினை நோக்கி முன்னேறு!*
- ☼ *புரட்சிக் கட்சியைக் கட்டி எழுப்பு!*

*1991 மே 01*

படிப்பகம்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பத்திரிகைகளுக்கு சந்தாதாரர் ஆகுங்கள்.

(அஞ்சல் முகவாகள் கடைசிப் பக்கத்தில் தரப்பட்டுள்ளன)

කම්කරු මාවත

தொழிலாளர் பாதை

**தொழிலாளர் பாதை, கம்கரு மாவத்த** ஆகியன நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையாகிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தமிழ், சிங்கள பத்திரிகைகளாகும்.

சர்வதேச கட்டணங்கள்

| | |
|---|---|
| மாதம் | S 15.00 |
| 1 வருடம் | S 30.00 |

இலங்கை கட்டணங்கள் (அஞ்சல் கட்டணம் உட்பட)

| | | மாதம் 3 | 6 | 12 |
|---|---|---|---|---|
| தொழிலாளர் பாதை | ரூ. | 18.00 | 36.00 | 72.00 |
| கம்கரு மாவத்த | ரூ. | 48.00 | 96.00 | 192.00 |

**புலட்டின்** அமெரிக்க ட்ரொட்ஸ்கிச வேர்கஸ் லீக்கின் வாரப்பத்திரிகையாகும்.

அமெரிக்க கட்டணங்கள்

| | |
|---|---|
| 2 மாதம் | S 5.00 |
| 6 மாதம் | 15.00 |
| 1 வருடம் | 30.00 |

சர்வதேச கட்டணங்கள்:

| ஐரோப்பா லத்தீன் அமெரிக்கா | ஆஸ்திரியா, ஆபிரிக்கா, ஆசியா: |
|---|---|
| S 30.00 | S 35.00 |
| 60.00 | 70.00 |
| 100.00 | 140.00 |

Bulletin

Workers News

**வேர்க்கஸ் நியூஸ்,** அவுஸ்திரேலியப் பகுதியின் வாரப் பத்திரிகையாகும். இதில் நியூஸிலாந்து, தென்னாசியா செய்திகள் உள்ளடங்கியுள்ளது.

சந்தா கட்டணங்கள்:

| | |
|---|---|
| 6 மாதம் | S 15.00 |
| 1 வருடம் | 30.00 |

சர்வதேச கட்டணங்கள்: (1ம் வருப்பு)

| | |
|---|---|
| 6 மாதம் | S 30.00 (அவுஸ்திரேலிய) |
| 1 வருடம் | [illegible] |

**லா பிறசே ஊவியர்,** கனேடிய வேர்க்கஸ் லீக்கின் பிரஞ்சு மொழிப் பத்திரிகை யாகும்.

| | |
|---|---|
| 6 மாதம் | $ 5.00 (கனடா) |
| 1 வருடம் | 8.00 |

la presse ouvrière

www.padippakam.com

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பத்திரிகைகளுக்கு சந்தாதாரர் ஆகுங்கள்.

(அஞ்சல் முகவாகள் கடைசிப் பக்கத்தில் தரப்பட்டுள்ளன)

International Worker

Organ of the Central Committee of the ICP British section of the ICFI

**இன்றநஷனல் வேர்க்கர்.** நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரித்தானியப் பகுதியின் மாதம் இருமுறை வெளியாகும் பத்திரிகையாகும்.

சந்தா கட்டணங்கள்:

| | |
|---|---|
| 6 மாதம் | £ 6.00 |
| 1 வருடம் | 12.00 |

சர்வதேச கட்டணங்கள்:

| ஐரோப்பா | அமெரிக்க,லத்தின், அமெரிக்க, ஆசியா, அவுஸ்திரேலியா, |
|---|---|
| £ 15.60 | £ 25.20 |

---

நியோ ஆபைற்றர் பிரேச,நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜேர்மன் கிளையாகிய லீக் ஒப் வேர்க்கள்சின் (B.S.A.) வாரப் பத்திரிகையாகும்.

சந்தா கட்டணங்கள்:

| | |
|---|---|
| 6 மாதம் | DM 35.00 |
| 1 வருடம் | DM 65.00 |

ஐரோப்பிய கட்டணங்கள்

| | |
|---|---|
| 6 மாதம் | DM 45.00 |
| 1 வருடம் | DM 85.00 |

neue ARBEITER PRESSE

Nr. 650, 12. April 1991

---

PRENSA OBRERA

**பிரென்சா ஒப்ரேரா**, அமெரிக்க வேர்க்கஸ் லீக் ஸ்பானிய மொழிப் பத்திரிகையாகும் இதில் லத்தின் அமெரிக்க செயதிகளும், வேர்க்கஸ் லீக் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரதான அறிக்கைகளும் பிரசுரிக்கப்படும்.


அமெரிக்ககட்டணங்கள்

| | |
|---|---|
| 6 மாதம் | $ 3.00 |
| 1 வருடம் | 6.00 |

சர்வதேச கட்டணங்கள்

| ஐரோப்பா லத்தீன் அமெரிக்கா | அவுஸ்திரியா, ஆபிரிக்கா, ஆசியா |
|---|---|
| $ 9.00 | $ 12.00 |
| 18.00 | 24.00 |

www.padippakam.com




## சந்தாதாரர் ஆகுங்கள்

நான்காம் அகிலம்

சர்வதேச மார்க்சிச சஞ்சிகை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் பிரசுரிக்கப்படுகின்றது.

இச்சஞ்சிகை இப்போது ஆண்டுக்கு இருமுறை வெளியாகின்றது. கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியன் நெருக்கடியின் வரலாற்று பின்னணி பற்றிய ஆய்வுகள், சமீபத்தில் வெளிவந்த சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இச்சஞ்சிகை சிறீலங்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா நாடுகளின் வர்க்கப் போராட்டங்களின் சமகால அபிவிருத்திகளை ஒழுங்காக ஆய்கின்றது.




## ருஷ்ய மொழி நான்காம் அகிலம் லட்டின்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ருஷ்ய மொழி காலாண்டு புலட்டினை வெளியிட்டு வருகின்றது. 1930ம் ஆண்டில் ட்ரொட்ஸ்கியின் நேரடி மேற்பார்வையின் கீழ் 'இடது எதிர்ப்பு' பிரசுரித்ததன் பிற்பாடு ட்ரொட்ஸ்கிச இயக்கம் ருஷ்ய மொழியில் பிரசுரிப்பது இதுவே முதற்தடவையாகும்.

தோழர் டேவிட் நோர்த்தினால் எழுதப்பட்ட 'சோசலிசம் எதிர் பெரெஸ்ரொயிகா' என்ற நூலின் ருஷ்ய மொழி பெயர்ப்பு முதலாவது வெளியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

www.padippakam.com

தமிழில் வெளிவந்துள்ளது:

## முதலாளித்துவத்தின் மரண ஓலமும் நான்காம் அகிலத்தின் பணிகளும் இடைமருவு வேலைத்திட்டம்




நான்காம் அகிலத்தின் ஸ்தாபக ஆவணமான இடைமருவு வேலைத்திட்டம் தமிழில் வெளிவந்துள்ளது. ஏகாதிபத்தியத்தின் இன்றைய நெருக்கடியின் தன்மை, தோற்றுவாய் பற்றியும், துரோகத் தலைமைகளின் காட்டிக் கொடுப்பு பற்றியும், அதனால் தொழிலாள-ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் தலைமை நெருக்கடி பற்றியும் இந்நூல் இற்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக படம்பிடித்துக்காட்டியுள்ளது.

சமூக ஜனநாயக, ஸ்டாலினிச தலைமைகளின் துரோகங்களுக்கு எதிராக சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தினை கட்டி எழுப்பும் போராட்டத்தின் தீர்க்கமான தன்மையை இந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய நூல்.

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வெளியீடுகள் கிடைக்கும் இடங்கள்

**சிறிலங்கா**

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10,
சிறிலங்கா

Revolutionary Communist League
90, 1st Maligakande Lane
Colombo-10
Sri Lanka

**GERMANY**
Arbeiterpresse Verlag
Postfach 10 01 05
Alfredstr. 71, 4300 Essen 1
Germany
Telephone: (0210) 73 35 56

**AUSTRALIA**
Labour Press Books
PO Box 7
Marrickville, NSW 2204
Australia
Telephone: (02) 519-8621
FAX: (02) 516-1008

**CANADA**
La Presse Ouvrieare
C.P. 5534 Succ. "B"
Montreal
Quebec H3B 4P1

**BRITAIN**
ICP
PO BOX 71
Rotherham, South Yorkshire
S60 ISU
Great Britain

**AMERICA**
Labor Publications, Inc.
PO Box 33023
Detroit, MI 48232
Telephone (313) 872-1849
FAX (313) 875-6385


www.padippakam.com

## 'த ஹெரிடேஜ் வீ டிபென்ட்'

(நாம் பேணும் மரபுரிமைகள்)

நான்காம் அகிலத்தின் வரலாற்றுக்கு ஒரு பங்களிப்பு

- டேவிட் நோர்த்




உலக மார்க்சிச இயக்கமான நான்காம் அகிலம், 1938ல் ஸ்டாலினின் கடும் எதிரியான லியொன் ட்ரொட்ஸ்கியால் நிறுவப்பட்டது. இதன் ஸ்தாபகர்க லியொன் ட்ரொட்ஸ்கி அவரின் மகன் லியொன் செடோவ் மற்றும் சக சிந்தனையாளர்கள்-படுகொலை செய்யப்பட்டதோடு, இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்க ட்ரொட்ஸ்கிசத் தலைவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். இடைவிடாத கருத்து பேறுவாடுகள், தத்துவார்த்த மோதுதல்களுக்கு இடையேயும் முதல் மூன்று அகிலங்களைக் காட்டி ஒம் நான்காம் அகிலம் நின்று பிடித்ததோடு, உலகப் பூராவும் மார்க்சிச சோசலிஸ்டுகளின் ஆதரவை வென்றெடுத்துள்ளது.

இந்நூல் ஒரு நிச மார்க்சிச ஆய்வாக வெளி வந்துள்ளது. பரந்தளவிலான வரலாற்று நிகழ்வுகள் பற்றிய ஆய்வுகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தம் தொடக்கம் கொர்பச்சேவ் எழுச்சி வரையிலான சம்பவங்கள் ஆய்வுக் குளளாகி உள்ளன. அனைத்துலக மார்க்சியச் இயக்கத்தின் உள்ளேயான முக்கிய அரசியல் போராட்டங்கள் பல இந்நூலாசிரியரின் ஆழமான அரசியல் பார்வையில் அணுகி ஆராயப்பட்டுள்ள.

நான்காம் அகிலத்தினுள் ஏற்பட்ட தத்துவார்த்த முரண்பாடுகள் பற்றிய ஆய்வு சிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

விலை: S 18.95


---

## 'த றிவலூசன் பிற்றேட்'

உவட் இஸ் சோவியட் யூனியன்? வெயர் இஸ் இட் கோயிங்?

(காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி - சோவியத் யூனியன் என்றால் என்ன? அது எங்கே செல்கிறது?)

- லியொன் ட்ரொட்ஸ்கி




இந்த மார்க்சிச புகழ்பெற்ற நூல் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக வழங்கப்பட்டுள்ள முன்னுரை இன்றைய வாசகர்களுக்கு ட்ரொட்ஸ்கியின் மேதாவிலாசத்தினை விளக்குவ தோடு, அதன் சமகால முக்கியத்துவத்தையும் பறைசாற்றுகின்றது.

'த றிவலூசன் பீற்றேட்' ஸ்டாலினின் மாபெரும் அரசியல் எதிரியும் 1917 அக்டோபர் புரட்சியின் இணைத்தலைவருமான லியொன் ட்ரொட்ஸ்கியால் எழுதப்பட்டது. ட்ரொட்ஸ்கி, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இலக்கிய சிருஷ்டி கர்த்தாக்களில் ஒருவர். உலக வரலாற்றின் முதல் சோசலிசப் புரட்சியில் இருந்து தலைதூக்கிய அரசின் முரண்பாடுகளை மிகவும் நுணுக்கமாக ஆய்வு செய்துள்ளார். 1937ல் முதற் தடவையாக பிரசுரமான இந்நூலில் எழுப்பப்பட்ட வாதங் களுக்குப் பதிலளிப்ப தற்குப் பதிலாக ஸ்டாலின் மெக்சிக்கோவுக்கு கொலையாளியை அனுப்பினான். இந்நூல் இன்றுவரை சோவியத் யூனியனில் பிரசுரிக்கப்படவில்லை. ஆங்கு ட்ரொட்ஸ்கியின் வாழ்க்கையும் வரலாறும் பெரும் சார்சைக்கு உரியதாய் விளங்கியது.

விலை: S 18.95

படிப்பகம்

www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE

படிப்பகம்

www.padippakam.com

**Nehmt Teil an der internationalen Arbeiterkonferenz des IKVI am 16. und 17. November 1991 in Berlin!**

**Informationen und Anmeldung:**
**Bund Sozialistischer Arbeiter**
**Postfach 100 105, W-4300 Essen 1**
**Tel.: 0201 / 73 35 56**

**Tholilariar Pathai**
**Postfach 1609**
**W-7120 Bietigheim—Bissingen**

**ISBN 3 - 88634 - 503 - 3** **DM 2,-**

படிப்பகம்